வாராந்த சஞ்சிகை

சுடர் ஒளி

ஒக்ரோபர் 21 - 27, 2015

பக்கம் 24

விலை 30/-

மூச்சிழந்த பெரும் புயல்

கூந்தலைப் பார்த்தால் கணவன் வேலை

பெண்களில் ஒரு சிலருக்குதான் ஆறடி கூந்தல் இருக்கும். சீன கிராமத்தில் உள்ள அத்தனை பேருக்கும் ஆறடி கூந்தல் உள்ளது. இதனால் அக்கிராமம் கின்னஸ் சாதனை படைத்துள்ளது. சீனாவின் குவாங்சி ஷ ுவாங் பகுதியில் உள்ளது ஹ ுவாங்லூ யாவ் என்ற கிராமம். இங்கு 'யாவ்' என்ற பழங்குடியினர் வசிக்கின்றனர். பெரும்பாலும் சிவப்பு நிற ஆடைகளையே அணிவதால் 'ரெட் யாவ்' என்று அழைக்கப்பட்டு வருகின்றனர்.

பெரும்பாலும், பெண்களில் ஒரு சிலருக்குதான் ஆறடி கூந்தல் இருக்கும். ஹ ுவாங்லூ யாவ் கிராமத்தில் அத்தனை பெண்களுக்கும் சராசரியாக ஐந்தரை அடி நீள கூந்தல் இருக்கிறது. அதிகபட்சமாக ஒரு பெண்ணுக்கு 6.8 அடி நீளம் இருக்கிறது கூந்தல். 'நீள முடி கிராமம்' என்று இந்த கிராமம் கின்னஸ் சாதனை படைத்திருக்கிறது. மாப்பிள்ளை பார்க்கும் முன்பு 16 வயதில் முடி வெட்டிக் கொள்வார்களாம். அதற்கு பிறகு, வெட்டவே மாட்டார்கள்.

சில தசாப்தங்களுக்கு முன்பு வரை வித்தியாசமான நடைமுறையை யாவ் பழங்குடியினர் பின்பற்றி வந்திருக்கிறார்கள். பெண்ணின் கூந்தலை மற்ற ஆண்மகன் யாரும் பார்த்துவிடக் கூடாது. கணவனாக வரப்போகிறவன் அல்லது அந்த பெண்ணின் பிள்ளைகள் மட்டுமே பார்க்கலாம். வீட்டை விட்டு வெளியே செல்லும்போதும், வெளி ஆட்கள் வீட்டுக்கு வந்தாலும் முக்காடு ஒன்றை பெண்கள் அணிந்துகொண்டு விடுவார்கள்.

தெரியாத்தனமாக பெண்களின் கூந்தலை பார்த்த ஆண்களுக்கு என்ன தண்டனை தெரியுமா? 3 ஆண்டுகளுக்கு அவர்கள் வீட்டில் 'கணவனாக' வேலை பார்க்க வேண்டும். கடந்த 30 ஆண்டுகளாக இந்த விதிமுறைகளை மட்டும் யாவ் பழங்குடியினர் விட்டுவிட்டார்கள். ஆயுளில் ஒரே ஒருமுறை மட்டுமே முடி வெட்டிக் கொள்வது என்ற வழக்கத்தை தொடர்ந்து கடைபிடித்து வருகின்றனர். கோடை காலம் மற்றும் வசந்த காலத்தில் கிராமத்து பெண்கள் அனைவரும் ஜின்ஜியாங் ஆற்றுக்கு ஊர்வலமாக சென்று, தங்களது நீண்ட கூந்தலை அங்கு அலசுவதையும் ஒரு சடங்கு போல செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

வீடுகளில் மனிதர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருப்பவைகள் நாய்கள். உலக அளவில் நாய் வளர்ப்போரில் பலர், அவர்களது நெருங்கிய உறவினரைக் காட்டிலும் தங்கள் வீட்டு நாயையே அதிகம் நேசிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

அந்தளவுக்குச் செல்லப்பிராணியாக நாய்கள் பேர் போனவை. இந்நிலையில், இலானா என்கிற அமெரிக்க ஒப்பனைக் கலைஞர், தன் செல்ல நாய் மீது கொண்ட அதீத பாசத்தால், அதன் முகம் போன்றே தனக்கும் ஒப்பனை செய்துள்ளார்.

இலானாவிடம் இருப்பது சைபீரியன் ஹஸ்கி' என்கிற வகையைச் சேர்ந்த நாய். அந்த நாய் மீது தான் கொண்ட அளவில்லாத பாசத்தைக் காட்டுவதற்காக, அந்த நாயின் முகத்தைப் போன்றே அச்சு அசலாக தானும் மேக்கப்ஒப்பனை செய்துள்ளார்.

தத்ரூபமாக உள்ளது...

இலானாவின் ஒப்பனையைப் பார்க்கும் போது வித்தியாசமே இல்லாமல், தத்ரூபமாக உள்ளது. தனது நாயின் முகம் போலவே தத்ரூபமாக தன் முகத்தின் மீது அவர் ஒப்பனை செய்துள்ளார்.

நான்காயிரம் வைரக்கற்கள் பதித்த கேக்

உலகின் பிரபல பஷன் டிசைனரான டெபி விங்காம் என்ற பெண் உருவாக்கியுள்ள இந்த கேக் 450 கிலோ எடையில் 4 ஆயிரம் வைரக்கற்கள், செவ்வந்திக்கற்கள் மற்றும் மரகதங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்த கேக்கை செய்வித்தவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? யாருடைய பிறந்தநாளுக்காக இதை செய்கின்றார் என்ற விபரங்களை வெளியிட இந்த கேக்கை தயாரித்தவர் மறுத்துள்ளார்.

மூச்சிழந்த பெரும் புயல்

- உருத்திரா

நீண்டகாலத்துக்குப் பிறகு தமிழினியின் பெயர் உச்சரிக்கப்படுகின்றது. ஆனால் இம்முறை அவரது பெயர் உச்சரிக்கப்படும் கணத்தில் அவர் உயிரோடு இல்லை. தமிழினி என்ற பெயர் ஈழப்போரில் தவிர்க்க முடியாத ஆளுமையின் அடையாளம். ஆனால் அந்த ஆளுமை காலத்தின் விளையாட்டால் பல்வேறு நிலைகளில் எழுச்சியும், எவருமே சந்தித்திராத வீழ்ச்சியையும் சந்தித்தது. தமிழினியின் காலம் மூன்றாகக் கொள்ளப்படக் கூடியது. அந்த மூன்று காலங்களிலும் மூன்று வித முகங்கள், மூன்றுவித அடையாளங்கள் என அவர் உருமாறியிருந்தார் அல்லது காலமும், சூழமைவும் அவரை அவ்விதம் மாற்றியிருந்தன.

புலியான காலம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் மக்களாலும் போராளிகளாலும் மூன்று பெண்போராளிகளே அதிகம் அறியப்பட்டிருந்தார்கள். இராணுவப்பிரிவு அணிகளின் தளபதிகளான விதுஷா, துர்க்கா என்போரும், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினியுமே அந்த மும்மூர்த்திகள். விடுதலைப்புலிகளின் மகளிர் அணிச் செயற்பாடுகள் யாவுமே இந்த முச்சக்கர அச்சிலிலேயே நகர்ந்தன. மகளிர் இராணுவப் படையணிக்கு இரண்டு தளபதிகள் இருந்தபோதும், மகளிர் அரசியல் துறையை தமிழினியே தனித்துக் கட்டிக் காத்து வந்தார். அவருக்கு நிகரான இன்னொரு பெண் ஆளுமை புலிகள் அமைப்பில் மேலெழவில்லை. தீர்க்கமான முடிவை விரைந்தெடுக்கும் திறன், சமூகப் பிரக்ஞை, கேட்போரைக் கவர்ந்திழுக்கும் சொல்வன்மை, தலைவர் மீதான அசைக்க முடியாத விசுவாசம், போராளிகள் மீது காட்டிய அக்கறை என்பனவெல்லாம் அவரை எல்லோருக்கும் 'அக்கா'வாக மாற்றின.

தமிழினியக்கா சொன்னால் அதை தலையால் செய்து முடிக்கும் நிலையில் போராளிகள் இருந்தார்கள். தனியே அரசியல்துறைப் போராளிகள் மாத்திரமன்றி இராணுவப் பிரிவுப் பெண் போராளிகளும் - ஏன் ஆண் போராளிகளும் கூட- தமிழினியக்கா மீது தனி மரியாதை கொண்டிருந்தார்கள்.

பெரும்பாலும் தமிழினியக்கா வரிப்புலி உடையில்தான் போராளிகளையும், மக்களையும் சந்திக்க வருவார். பின்னால் மடித்துக் கட்டிய இரட்டைப் பின்னலும், கம்பீரமான சீருடையும், இடுப்பில் தொங்கும் பிஸ்டலுமாக

போரடிக்கும் கருவி

எல்லாமே முடிந்து
போனதாக
இறுகிப்போனது
மனசு.

இருப்பினும்
ஏதோவொரு
தொடக்கத்தை நோக்கியே
சஞ்சரிக்கிறது
சிந்தனை.

ஒவ்வொன்றிற்கும்
ஒரு காலமுண்டு
மௌனமாயிருக்கவும்,
பேசவும்,
பகைக்கவும்,
சிநேகிக்கவும்.

அதினதன் காலத்தில்
அத்தனையையும்
நேர்த்தியாக
நகர்த்திச் செல்கிறது
காலம்.

முந்தினதும்
பிந்தினதுமாக
சுழலும்
காலத்தின் கைகளில்
நானும் ஒரு
போரடிக்கும் கருவிதான்.

தமிழினி ஜெயக்குமரன்
01.08.2015.

வந்திறங்கும் தமிழினியக்காவைப் பார்க்கும் போது எவருக்கும் அவர்களையுமறியாமல் ஒரு அபிமானம் தோன்றிவிடும். இத்தனைக்கும் அவர் சீருடையில் கூட எப்போதும் சிரித்தபடிதான் இருப்பார். அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைப் போன்று அக்காவும் அடிக்கடி மெல்லிதான புன்னகையினைப் படரவிட்டுக் கொண்டுதான் இருப்பார். ஆனால் மேடையில் ஏறி பேசத் தொடங்கிவிட்டால் அவ்வளவுதான். நெருப்பைக் கக்கும் சொற்களோடு உறுமத் தொடங்கிவிடுவார். சிங்களப் பேரினவாதத்தின் கொடுமைகளைப் பட்டியலிட்டு, புலிகளின் தியாகங்களை விதந்தேற்றி, கடைசியில் எல்லோரும் களத்துக்கு வந்தால் தான் தமிழீழத்தை அடையமுடியும் என்று அக்கா அறைகூவல் விடுக்கும் போது, போராட்டத்தைப் பற்றி சரிவர உணராதிருந்தவர்கள் கூட, போராடக் கிளம்பி விடுவார்கள். அத்தனை சக்தி அக்காவின் சொற்களுக்கு இருந்தது.

தனியே போராட்டத்தோடு மாத்திரம் அவர் முடங்கிக் கொள்ளவில்லை. மக்கள் நலன்சார் பணிகளிலும் முனைப்போடு செயற்பட்டார். போரின் போது மக்கள் இடம்பெயர்கையில் ,மகளிர் அரசியல்துறைப் போராளிகளைக் களமிறக்கி, மக்களின் துயர் துடைக்கும் பணிகளைத் துரிதப்படுத்தினார்.

சண்டைக்காலத்தில் மட்டுமல்லாது சமாதான காலத்திலும் அக்காவுக்கு ஓய்வு இருக்கவில்லை. சமாதானத்தின் பெயரால் தமிழினத்தைச் சுற்றிவரப் பின்னப்படும் சதிவலைகளைக் கண்டறிந்து, அவற்றை களைவது, சமர்களத்தை விடவும் கடுமையானது.

சமர்க்களத்தில் ஏற்கனவே எதிரி எனப் பிரகடனப்படுத்தப்பட்டவர்கள் கண்ணெதிரே நிற்பதால் அவர்களோடு போரிடுதல் அவ்வளவு கடினமில்லை. ஆனால் சமாதானப்போர் அப்படியல்ல. நண்பர்கள் என்ற போர்வையுடன், கையில் ஒலிவ் கிளைகளுடன் வருபவர்கள் கூட எதிரிகளாக இருக்கலாம். அப்படியான கண்ணுக்குத் தெரியாத எதிரிகளை இனம் கண்டு, அவர்களின் திட்டங்களை முறியடித்தல் என்பது சாதாரணவிடயமல்ல. அப்படி அசாதரணமான விடயத்தைக் கூட தமிழினியக்கா சாதித்துக் காட்டியதால்தான், புலிகள் சார்பான பேச்சுவார்த்தைக் குழுவிலும் இடம்பிடித்தார்.

2009 மே மாதம் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படும் வரை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகத் தமிழினியக்காவே அந்தப் பிரிவைக் கட்டிக்காத்தார்.

புனர்வாழ்வுக்காலம்

தமிழினியக்காவின் வாழ்வில் இந்தக் காலம்தான் மிக மோசமானது. அவர் எல்லோராலும் கைவிடப்பட்டிருந்தார்.

இத்தனை நாளும் அவர் கண்டிருந்த தமிழீழக் கனவு முள்ளிவாய்க்காலில் புதைந்து போயிருந்தது. கனவுகளைத் தொலைத்துவிட்டு, வெறுங்கையோடு சாதாரண பெண்ணாக மீண்டும் மாறுவதென்பது அவ்வளவு சுலபமல்ல.

தமிழினத்தின் பெண்களுக்கே தலைமையாகச் செயற்பட்ட தமிழினியக்கா, தன் அதிகாரம், படையணி, ஆயுதம் எல்லாவற்றையும் இழந்தவராக, கையறு நிலையில் சமூகத்தோடு ஒன்றிக்க முடியாதிருந்தது. வழக்கமாகப் புலிகளின் தாக்குதல் பிரிவில் உள்ள பெண்போராளிகளுக்கு தலைமுடி ஆண்களைப் போல குட்டையாக வெட்டப்படும். ஆரம்பத்தில் இரட்டைப் பின்னலை மடித்து பின்பக்கமாகக் கட்டுவதே சகல பெண்புலிகளின் வழக்கமாக இருந்தது. ஆனால் ஆனையிறவுத் தளம் மீதான 90 களில் நடத்தப்பட்ட ஆகாய கடல் வெளிச் சமரின் போது இந்த இரட்டைப் பின்னல் புலிகளுக்கு சிக்கலை

உண்டுபண்ணியது.

ஆனையிறவுத் தளத்துக்குள் இராணுவம் எதிர்பாராத ஒரு வழியில் ஊடுருவி அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கத் திட்டம் தீட்டப்பட்டது. மிக நீண்ட தூரத்துக்கு போடப்பட்டிருந்த முட்கம்பிச் சுருளையே பாதையாக்கி, சுருளின் ஊடாக முகாமுக்குள் நுழையப் புலிகளின் படையணிகள் புறப்பட்டன. ஆனால் தாக்குதல் தொடங்கி சில

(18 ஆம் பக்கம் பார்க்க)

"நாங்கள் கிளம்புகிறோம். எங்கள் குடும்பத்தோடு இருக்க விரும்புகிறோம்" என்றனர் அவர்கள்.

தான் எவ்வளவு கூறியும் அவர்கள் பிடிவாதம் பிடிக்கவே சரி, மீதம் இருக்கும் கூலியைப் பெற்றுக் கொண்டு நீங்கள் கிளம்பி விடலாம்" என்றார். அவர்கள் அப்படிக் கிளம்பிச் செல்ல அடுத்த ஆணையை தனது படைத்தளபதிகளுக்கு இட்டார்.

நம்மிடமிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கும் கூலிப்படையினரை வளைத்துப் பிடியுங்கள். அவர்களில் ஒருவர்கூட உயிரோடு இருக்கக் கூடாது".

ஆணையும் நிறைவேற்றப்பட்டது. ஏழாயிரம் வீரர்கள் கிரேக்கப் படையினரால் வெட்டிச் சாய்க்கப்பட்டனர்.

பின்னர் அலெக்ஸாண்டர் சிந்து நதியைக் கடந்தார். வழியில் எதிர்ப்பட்ட சிறு சிறு நாடுகளைத் தன் வசம் ஆக்கிக் கொண்டார். ஜீலம் நகருக்கு மேற்கே இருந்த பல இந்தியப் பகுதிகளை (பெரிதாக யுத்தம் என்று எதுவும் இல்லாமலேயே) தன் பிடிக்குள் கொண்டு வந்தார் அலெக்ஸாண்டர். பல குறுநில மன்னர்கள் பயத்தின் காரணமாகவே அலெக்ஸாண்டருக்கு அடி பணிந்தார்கள்.

ஆனால் கேகய நாட்டு மன்னன் இப்படிப் பட்டவர் அல்ல. அவர் பெயர் பர்வதேஷ்வரன். இந்தப் பெயர் வாயில் நுழையாததால் கிரேக்கர்கள் அவரை வேறொரு பெயரில் அழைத்தனர். அந்தப் பெயர் போரஸ்.

கேகய மன்னருடன் போரிடுவதற்கு முன்னால் தன் படை வீரர்களுக்கு முழுமையாக இரண்டு மாத ஓய்வளித்தார் அலெக்ஸாண்டர். இந்த ஓய்வு தன் தரப்புக்கு மிகவும் சாதகமாக இருக்குமென்றும் தனது வீரர்கள் புத்துணர்வுடன் போரிடுவார்கள் என்றும் அலெக்ஸாண்டர் கருதினார்.

ஆனால் போரில் ஈடுபடாத இந்த இரண்டு மாதங்களில் கிரேக்க வீரர்கள் வேறு மாதிரி யோசிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் தங்கள் குடும்பங்களை விட்டு வந்து பல வருடங்கள் ஆகியிருந்தன. அலெக்ஸாண்டரின் ஆக்கிரமிப்பு வெறி அடங்குவதாக இல்லை. இந்த நிலையில் தங்கள் குடும்பத்தினரைப் பார்க்காமலேயே செத்து விடுவோமோ என்ற எண்ணம் அவர்களை அச்சுறுத்தியது. கேகய நாட்டுப் படையில் வெற்றி கண்ட பிறகு மன்னரிடம் இதுபற்றிப் பேச வேண்டுமென்று நினைத்தார்கள்.

இந்த இரண்டு மாத இடைவெளி வேறொரு விபரீதத்தையும் அலெக்ஸாண்டர் தரப்புக்கு கொண்டு வந்திருந்தது.

இரண்டு மாத காலம் தன் படைக்கு ஓய்வு கொடுத்தார் அலெக்ஸாண்டர். ஆனால் இதைத் தொடர்ந்து மழைக் காலம் வந்து விட்டது. ஜீலம் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது.

அலெக்ஸாண்டர் ஜீலம் நதியின் ஒரு புறத்தில் தன் படையினருடன் கூடாரத்தில் தங்கியிருக்க, எதிர்ப்புறத்தில் கேகய மன்னனின் தளபதியும் வேவுப் படைகளும் இவர்களது நடவடிக்கையை கவனித்துக் கொண்டிருந்தன.

வெள்ளத்தில் அந்த இடத்தில் படையுடன் நதியைக் கடந்தால் தாக்குதல் பலமாக இருக்கும் என்பதை உணர்ந்தார் அலெக்ஸாண்டர். வேறொரு திட்டத்தைத் தந்திரமாகத் தீட்டினார்.

தன்னைப் போலவே வேறொரு வனுக்கு வேடமிட்டார். பிறகு சத்தமில்லாமல் இரவுகளில் கொஞ்சம் கொஞ்சமாக தன் படையினரை ஜீலத்தின் மற்றொரு பகுதிக்கு வரவழைத்துக் கொண்டார்.

அலெக்ஸாண்டர் ஒரே இடத்தில் இருப்பதாக கேகய நாட்டு ஒற்றர்கள் தகவல் தெரிவித்துக் கொண்டிருக்க, அலெக்ஸாண்டர் அந்தக் கூடாரத்திலிருந்து 17 மைல் தொலைவில் அமைந்திருந்த பகுதிக்குச் சென்றிருந்தார். அந்தப் பகுதி ஜலால்பூர். அங்கிருந்து ஜீலம் நதியை எளிதாகக் கடக்க முடியும் என்று கணித்திருந்தார் அலெக்ஸாண்டர். 5,000 குதிரைகள் மற்றும் 10,000 காலாட் படையினரோடு இரவோடு இரவாக ஜீலம் நதியை கடக்க முடிவெடுத்தார்.

தாமதமாகவே இதை உணர்ந்தாலும் கேகய மன்னன் புதிய பகுதிக்கு தன் படையை அனுப்பத் தொடங்கினார்.

அலெக்ஸாண்டரின் சேனைக்கு வேறொரு பிரச்சினை உண்டானது. அவரது குதிரைப் படையினர் அனுபவம் வாய்ந்தவர்கள் என்றாலும், யானைப் படையை அவர்கள் இதுவரை எதிர்கொண்டதில்லை. கேகய மன்னனின் 200க்கும் மேற்பட்ட போர் யானைகளைக் கண்டதும் அலெக்ஸாண்டர் சைனியத்தின் குதிரைகள் மிரண்டன. எனவே குதிரை வீரர்கள் குதிரைகளை விட்டு இறங்கி கால்நடையாகவே சென்று யானைகளைத் தாக்க வேண்டியிருந்தது. அப்போது பல வீரர்கள் யானைகளின் காலடியில் மிதிபட்டு இறந்தனர்.

ஆனால் ஒரு கட்டத்தில் யானைப் படை திடீரென உன்மத்தம் கொண்டது. யார் தனது படை, யார் எதிரிப்படை என்ற வேறுபாடு அறியாமல் செயல்பட்டன. இதன் காரணமாக கேகய நாட்டைச் சேர்ந்த படை வீரர்களுக்கு தங்கள் தரப்பு யானைகளிலேயே இறக்க நேரிட்டது.

'ஜீலம்' யுத்தம் என்று சரித்திர ஆசிரியர்களால் குறிப்பிடப்பட்ட இந்தப் போர் சுலபத்தில் ஓய்வதாக இல்லை. கேகய மன்னர் பர்வதேஷ்வரன் மிகவும் வீரத்தோடு போரிட்டார். என்றாலும் எப்போதும் வெற்றிகளையே சுவைத்த அலெக்ஸாண்டர் அப்போதும் வெற்றி பெற்றார்.

ஆனாலும் கேகய மன்னனைப் பற்றி அவர் மனதில் ஒரு நல்ல கருத்து உருவாகியிருந்தது. போரில் அவன் படை சளைக்காமல் இறுதிவரை திறமை காட்டிய விதம் அலெக்ஸாண்டரைக் கவர்ந்திருந்தது. எனவே கைவிலங்கிடாமல் பர்வதேஷ்வரனை (போரஸை) அழைத்து வரக் கட்டளையிட்டார் அலெக்ஸாண்டர். ஏழு அடி உயரம் கொண்ட ஆஜானுபாகுவான கேகய மன்னனின் முகத்தில் கலக்கமே இல்லாதது அலெக்ஸாண்டருக்கு வியப்பை அளித்தது.

போரஸ், உங்களை எப்படி நடத்த வேண்டும்?" என்று கேட்டார் அலெக்ஸாண்டர். பளிச்சென வந்தது பதில்.

(வளரும்)

அலெக்ஸாண்டர் முன்பு நிறுத்தப்பட்ட போரஸ் (இடது).

அமேரிக்காவில் புளோரிடா மாநிலத்தை சேர்ந்தவர் கத்தே பிருய்ன். இவர் அணிலை வித்தியாசமான முறையில் புகைப்படம் எடுத்து இருக்கிறார்.

இதற்காக அவர் கடலைகளை இலஞ்சமாக கொடுத்து இருக்கிறார்.

இந்த கடலைகளுக்கு ஆசைப்பட்டு அணில் அவர் சொன்னபடி எல்லாம் 'போஸ்' கொடுத்து இருக்கிறது.

பியானோ வாசிப்பது போலவும், சக்கர நாற்காலியை தள்ளுவது போலவும், தொலைபேசியில் பேசுவதைப் போல மட்டுமல்லாமல் இன்னும் பல கோணங்களில் புகைப்படம் எடுத்து இருக்கிறார்.

சொன்னதைச் செய்யும் அணில்

பன்னெடுங்காலமாக ஒரு பாறை, தரை மட்டத்தில் படாமல் அந்தரத்தி ல் தொங்கிக்கொண்டிருக்கும் அதிசயம். சவுதி அரேபியாவில் உள்ள அல் - கசனா பகுதியில் ஒரு கிராமத்தில் தான் இந்த அதிசய பாறை உள்ளது. அந்தரத்தில்! தொங்கிக் கொண்டிருக்கும் இந்த பாறையில் 1989 ஆம் ஆண்டு இந்த அதிசயப் பாறையின் பின்புறத்திலிருந்த ஒரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டான் . இன்றும் கூட அந்த சுடப்பட்டவரின் உடலிலிருந்து சிதறிய இரத்தம் உறையாமல் அப்படியே உள்ளது.

இந்த அதிசயப் பாறையின் மற்றொரு அதிசயம் என்னவென்றால், தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப இது மேலும் கீழுமாக அசைகின்றதாம்.

அந்தரத்தில் தொங்கும் பாறை



சுடர் ஒளி
வாரந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

ஆலயங்களைப் புனிதமாக்குவோம்

ஆலயங்கள் புனிதம் வாய்ந்தவை. அவை வன்முறை களை. உருவாக்குபவை அல்ல. ஆலயங்களில் பிரச்சினை எதுவும் நிகழ்ந்தால், அவை குறித்துப் பேசி, சட்ட ரீதியான இணக்கத்துக்கு வரவேண்டும். உங்கள் செயற்பாடுகள் உங்களது கலாசாரத்தை வெளிப்படுத்துபவனவாக அமைய வேண்டும்.

ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு மார்க்கம். அந்த மார்க் கம் - மதம் மனிதர்களாலேயே உருவாக்கப்பட வேண்டும். மிருகங்களால் அல்ல.

மேற்போர்ந்த கருத்துக்களை முன்வைத்திருக்கிறார் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பார்.

வடம்ராட்சி, உடுப்பிட்டிப் பிரதேசத்தில் உள்ள ஆலயம் ஒன்றில், இரு தரப்புகளுக்கு இடையில் நீண்ட காலமாக நிலவி வரும், நிர்வாகப் பிரச்சினை குறித்து ஆராய்ந்து தீர்த்து வைப்பதற்காக கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதில், கரவெட்டிப் பிரதேச செயலக அதிகாரிகள், மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் பங்குபற்றினர். அங்கு வைத்தே, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மேற்போர்ந்த பொன்னான கருத்துக்களை முன்வைத்தார்.

அவரின் இந்தக் கருத்துக்களை நிர்வாகத்தினர் மற்றும் வழிபடுவோர் மக்கள் ஊன்றி மனம் கொள்ள வேண்டும்.

வடமராட்சியில் மட்டுமன்றி, வடக்கின் மிகப் பல ஆல யங்களிலும் மேற்போர்ந்த அவை சார்ந்த (வேண்டாத) பிரச் சினைகள் நிலவுகின்றன; பொங்கி வழிகின்றன. இவையும் வடக்கின் கலாசாரங்களில் ஒன்றாக உருவாகின்றனவோ என்ற சந்தேகமும் உயர்ந்து வருகிறது.

ஆன்மிகம், அதன் வழிபட்ட ஆலயதரிசனம், மனிதனை நன்னெறிப்படுத்துவதற்கான பல கூறுகளில் ஒன்று. முதன்மையானதும் கூட. ஒவ்வொரு மனிதனுக்கும், அவனி டமே உள்ளுறையும் இறை பக்தி. அவரவர் மனநிலைக்கு ஏற்ப மாறுபடலாம்; ஆனால் உள்ளிருந்து எழும் அருள் ஒளி முற்றாக மறைந்து விடுவதில்லை.

ஆகையால் சட்டம் போட்டு அருள் ஒளி ஏற்ற இயலாது. அவரவர் உள்ளக் கமலங்களில் இருந்து அதற்கான ஒளி பிறக்க வேண்டும்.

ஆலயங்கள் அருள் சார்ந்த மனஒளி தருபவை. அங்கே எல்லோரும் சமன். அதனால் அவற்றை எவரும் தமக்குரிய சொத்தாக்கிக் கொள்ள நினைப்பது, செயற்படுவது வலிந்து சேறு பூசிக்கொள்வதற்கு ஒப்பானது; சமனானது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது, எமது மூதாதையர் காலத்தில் இருந்தே பழித்துப் படித்துச் சொல்லப்படும் நன்னெறிகளில் ஒன்று.

ஆயினும், இப்போது ஆலயங்களை, பணம் தேடும் / சேர்க்கும் நிலையங்களாக மாற்றும் பாவம் மேலுயர்ந்த வருகிறது. அதனைச் சட்டத்தின் ஊடாக அன்றி, பக்தர்கள், ஆலய நிர்வாகிகள், தத்தமது நெஞ்சங்களை, மனங்களை மாசுப் படலங்கள் படராமல் தடுப்பதில் அவரவரே, தனித் தனியே பக்குவமாக இயற்ற வேண்டும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும், ஆலயங்களுக்கு மன அழுக்கு கள் பூசும் நிலையைத் தவிர்த்து, மக்கள் - பக்தர்கள் - தமது மறுமையை எதிர்நோக்கியும் இம்மையை உத்தேசித்தும் ஆலயங்கள் ஆன்மா ஈடேற்றத்துக்கு உதவுவனவாக மிளிர் வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியம்.

அறநெறி மேலோங்கவும் இறைபயத்தில் - பத்தியில் நாட்டம் கொள்ள மக்களை வழிப்படுத்த வகைசெய்யவும் பிறழ்ந்து போய்க்கொண்டிருக்கும் எமதுசமய கலாசாரம் நன்னெறி நின்று தழைத்தோங்கவும் வகை செய்வது எமது முதற் கடமையாகட்டும்.

அதுவே இன்று எமது சமூகங்களுக்கு அவசியமான சமயப் பணியாகும். இதுவே காலத்தின் தேவையுமாகும்.

- வேல்தர்மா

ரஷ்யாவிற்கு எதிராகத் போராடுவார்களா ஐ.எஸ்.

இஸ்லாமிய அரசு அமைப்பு ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் எதிராகப் புனிதப் போர் தொடுக்கும்படி உலகெங்கும் வாழும் இஸ்லாமியர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. ஒரு ஒலிப்பதிவின் மூலம் விடுக்கப்பட்ட இந்த அழைப்பில் முஸ்லிம்களுக்கு எதிராக சிலுவைப் போர் தொடுத்துள்ள இரு நாடுகளுக்கும் எதிராக இஸ்லாமிய இளைஞர்களைக் கிளர்ந்து எழும்படி அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை சிரியாவைச் சேர்ந்த கிறிஸ்த்தவப் பேராயர் JeandClment Jeanbart மேற்கு நாடுகள் இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கு எதிரான போரில் அதிபர் பஷார் அல் அசாத்திற்கு துணை நிற்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் சிரியாவில் ரஷ்யத் தலையீட்டையும் வரவேற்றுள்ளார்.

மக்களாட்சி வேண்டி அதிபர் பஷார் அல் அசாத்திற்கு எதிராக உருவான அரபு வசந்தப் புரட்சி சுனி - சியா முஸ்லிம்களிடையேயான மோதலாக மாறி பிராந்திய நாடுகளின் போட்டிக்களமாகி இப்போது வல்லரசு நாடுகளின் நிகராளி மோதல் (Proxy war) களமாகவும் உருவெடுத்ததுடன் இஸ்லாமிற்கும் கிறிஸ்த்தவத்திற்கும் இடையிலான முறுகல் களமாகவும் திரிவுபட்டுள்ளது. சிரிய உள்நாட்டுக் குழப்பம் தொடங்கியதில் இருந்தே அங்கு வாழும் கிறிஸ்த்தவர்கள் அசாத்தின் ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றனர். அசாத் சிரியாவில் ஒரு மதவாத ஆட்சியை நடத்தவில்லை.

ரஷ்யத் தலைநகர் மஸ்கோவில் ஐ எஸ் அமைப்பு எனப்படும் இஸ்லாமிய அரசு அமைப்பினால் பயிற்றுவிக்கப் பட்ட தாக்குதலாளிகளைக் கைது செய்ததாக செய்திகள் வெளிவந்துள்ளன. 2015 ஒக்டோபர் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மஸ்கோவில் உள்ள ஒரு தொடர் வீட்டுத் தொகுதியில் FSB எனப்படும் ரஷ்ய உளவுத் துறையினர் திடீரெனப் புகுந்து சோதனை நடத்திய போது பதினொரு இறாத்தல் எடையுள்ள வெடி பொருட்களைக் கைப்பற்றினர். இவை கைப்பேசிகளில் வைத்து வெடிக்கச் செய்யத் தயாரான நிலையில் இருந்தது. இது தொடர்பாக பத்து முதல் பதினைந்து வரையிலானவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். அதில் மூவர் சிரியர்கள் என்கின்றது FSB எனப்படும் ரஷ்ய உளவுத் துறை. மஸ்க்கோவின் தொடருந்துப் போக்குவரத்தை இலக்கு வைத்து இவர்கள் தாக்குதல் செய்யவிருந்தனர் என்றது FSB. ரஷ்யா சிரியாவில் 2015 செப்டம்பர் 30ஆம் திகதி ஐ எஸ் அமைப்பினருக்கு எதிரான தாக்குதல்களைத் தொடங்க முன்னரே இத் தாக்குதலாளிகள் ரஷ்யாவிற்கு சிரியாவில் இருந்து அனுப்பப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. ரஷ்யாவில் இரண்டு கோடி இஸ்லாமியர்கள் வாழ்கின்றார்கள்.

ரஷ்யாவின் North Caucasus பிராந்தியத்தில் இருந்து இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இஸ்லாமியர்கள், சிரியா சென்று ஐ எஸ் அமைப்பில் இணைந்து போராடுகின்றார்கள். இவர்களை சிரியாவில் வைத்து அழிப்பதும் ரஷ்யப் படைகள் சிரியாவிற்கு அனுப்பப்பட்டதின் ஒரு நோக்கமாகவும் கருதப்படுகின்றது.

ரஷ்யாவின் செஸ்னியப் பிராந்தியத்தில் உள்ள இஸ்லாமியப் போராளியான Abu Omar aldShishani இறப்பதற்கு முன்னர் தனது தந்தையிடம் ஐ எஸ் போராளிகள் ரஷ்யாவிற்குப் படையெடுப்பார்கள் எனச் சூழுரைத்திருந்தார்.

சிரியப் படைகளுக்கு ஏற்பட்ட பின்னடைவால் ரஷ்யப் படைகள் சிரியாவில் தலையிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது ஒரு பேச்சு வார்த்தை மூலம் அசாத்தைப் பதவியில் இருந்து அகற்றும் அமெரிக்காவின் சதியைக் குழப்பி விட்டது. ரஷ்யப் படையினர் சிரியாவில் சென்று இறங்கியதுடன் முதல் வேலையாக இந்த ஏவுகணைகளும் அவற்றின் செலுத்திகளும் நிலை கொண்ட இடங்களை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தின. அதனால் மேற்கத்தைய ஊடகங்கள் ரஷ்யா ஐ எஸ் பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்தாமல் மிதவாதக் குழுக்கள் மீது தாக்குதல் நடத்துகின்றன என்று குற்றம் சாட்டின. அமெரிக்க ஆதரவு பெற்ற Tajamu aldEzzah அமைப்பினரின் மீது ரஷ்ய விமானப் படையினர் தாக்குதல் நடத்தியது பல சிரியர்களை ஆத்திரப்படுத்தியது. வட மேற்குப் பிராந்தியத்தில் உள்ள Talbiseh நகரில் ரஷ்ய விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் பதினேழு அப்பாவிகள் கொல்லப்பட்டனர். முதலில் எம்மை சிரிய அரச படைகள் கொன்றன. பின்னர் எம்மை ஹிஸ்புல்லா கொன்றது, அதைத்தொடர்ந்து ஈரானியப்

(22 ஆம் பக்கம் பார்க்க)

- ஆதங்கன்

சேயாவுக்கு ஒரு நீதி: வித்தியாவுக்கு இன்னொரு நீதியா?

நீதிமன்றங்களுக்கு நீங்கள் சென்றிருந்தால் அங்கே நீதிதேவதையின் உருவச்சிலையை அவதானிக்க முடியும். கட்டப்பட்ட கண்களோடு, கையில் நீதித்தராசோடு நிற்கும் அந்த தேவதையின் உருவம் நீதி கேட்டுச் செல்பவர்களின் மனதில் ஒரு நம்பிக்கையை உண்டுபண்ணும். அதாவது பாரபட்சம் பாராமல் நீதியை வழங்குவதைக் காட்டவே கட்டப்பட்ட கண்களோடு நீதி தேவதை தராசினைக் கைகளில் ஏந்தியிருக்கிறாள். கண்கள் திறந்திருந்தால் சிலவேளைகளில் ஏதாவது ஒரு பக்கம் அவளையும் மீறி பக்கம் சார்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே-எந்தப் பக்கம் நீதியின் தராசு தாழ்கிறது என்பதை அறியாதிருக்கவே- நீதி தேவதையின் கண்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் இப்படிக் கட்டப்பட்டுள்ள நீதி தேவதையின் கண்களைச் சிலர் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்தி தவறான பக்கம் தராசினை தாழ வைப்பதும் உண்டு. பெரும்பாலும் அதிகாரத்தில் உள்ளவர்களே இப்படி நீதி தேவதையையே ஏமாற்றும் கெட்டித்தனம்



கொண்டவர்கள்.என்றாலும் ஏதோ ஒரு கட்டத்தில் நீதிதேவதையின் மூன்றாவது கண் விழித்துக் கொண்டு, அவர்களுக்கு தண்டனை வழங்கிய வரலாறுகளும் உண்டு.

கட்டப்பட்ட கண்களோடு நீதிதேவதையை அப்படியே உறங்கு நிலைக்கு கொண்டு செல்வதும், தமக்கு விரும்பிய தருணங்களில் அதே நீதிதேவதையை அவசரப்படுத்தி வேலை வாங்கும் பழக்கமும் கூட அதிகாரத் தரப்பிடம் உண்டு.

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்று ஔவை சொல்லிச் சென்றது போல, ஏதாவது துயர் நேர்ந்தாலும் கூட சிறுபான்மையினரை விடவும் பெரும்பான்மையினருக்கே நீதி விரைவில் கிடைத்து விடும் நிலையே இலங்கையில் தொடர்கிறது.

அண்மையில் இலங்கையை உலுக்கிய சில சம்பவங்கள் போதும் இந்த நீதி நிலைநாட்டும் முறையை உணர்ந்து கொள்வதற்கு.

சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் புங்குடுதீவில் வித்தியா என்ற மாணவி கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டு, கொடூரமாகக் கொல்லப்பட்டிருந்தாள். அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது , இலங்கை முழுவதிலுமே வித்தியாவைக் கொன்றவர்களைக் கண்டுபிடித்து தண்டனையை வழங்க வேண்டும் என்ற போராட்டங்கள் வெடித்தன. மக்கள் எழுச்சியைக் கண்டு பொலிஸும் அவசரமாகக் களமிறங்கி 9 சந்தேக நபர்களைக் கைது செய்து தற்போது வரை விளக்கமறியலில் வைத்து விசாரித்து வருகின்றது. ஆயினும் வித்தியாவின் சடலத்தில் கண்டெடுக்கப்பட்ட தடயப்பொருள்களை இன்னும் உரிய பரிசோதனைக்கு அனுப்பி அதன் அறிக்கையினைப் பெற்றுக் கொள்ள பின்னடிப்பது தெரிகிறது. குறித்த தடயப் பொருள்கள் தொடர்பான விஞ்ஞானபூர்வமான -நிறுத்தமான- அறிக்கையே சந்தேக நபர்கள் குற்றவாளிகளா? இல்லையா? என்பதை நிரூபிக்க வல்லவை. எனவே மரபணு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளல் என்பது ஒரு வழக்கின் திருப்புமுனையாக அமைகின்றது. அத்தகைய திருப்புமுனையை ஏற்படுத்தி, வழக்கை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவதில் பொலிஸார் அசமந்தமாகச் செயற்படு கிறார்கள்.

பொலிஸார் தன்னிச்சையாக இயங்குவதில்லை. அரசு என்ன ஆணையிடுகிறதோ அதனையே அச்சொட்டாக செய்து முடிக்கும் 'சொன்னதைச் செய்யும் சுப்பன்' போன்றவர்கள். ஆகவே வித்தியாவின் வழக்கில் பொலிஸார் காட்டும் அக்கறை யீனம் என்பதை அரசு காட்டும் அலட்சியமாகவே நோக்க வேண்டியுள்ளது. வித்தியாவின் கொலை நிகழ்ந்து குடாநாடு ரணகளமாக மாறிய சந்தர்ப்பத்தில், திடீரென மௌனித்துக் கொண்டது. அதேவேளை அங்கு யாழ்ப்பாணத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரி , வித்தியாவின் தாயாரையும் சகோதரனையும் சந்தித்து ஆறுதல் சொன்னபோது -

விரைவில் வித்தியா கொலையாளிகள் தண்டிக்கப்படுவர். இந்த வழக்கை துரித கதியில் விசாரித்து தீர்ப்பை வழங்க விசேட நீதிச் செயற்பாடுகளை முன்னெடுப்பேன் என்று உறுதி கூறியிருந்தார். அப்படி அவர் உறுதிமொழி வழங்கி மாதங்கள் பல கடந்த போதும், வித்தியாவின் வழக்கு இன்னமும் ஆமை வேகத்திலேயே நகர்ந்து கொண்டிருக்கிறது.

இன்னொரு சம்பவம் மன்னார் புதைகுழிகள் பற்றியது. வீதி அகலிப்பு பணிகளின் போது, மன்னார் திருக்கேதீச்சரத்தில் ஏராளமான எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. படையினரால் கொல்லப்பட்ட அப்பாவிப்பொதுமக்களே இப்படி கொன்று புதைக்கப்பட்டிருக்க வேண்டுமெனெ தமிழ் மக்கள் சந்தேகம் எழுப்பினர். ஆயினும் அங்கு தொன்மையான மயானம் ஒன்று இருந்ததாகவும், இயற்கையாக இறந்தவர்களின் உடலே அப்படி புதைக்கப்பட் டுள்ளதாகவும் இலங்கை தொல்லியல் திணைக்களம் எந்தவொரு ஆய்வும், ஆதாரமும் இல்லாமல் மன்னார் புதைகுழி விவகாரத்தை மறைக்கப் பார்த்தது.

ஆயினும் 20 வருடங்களுக்கு முன்னர் வரை அங்கு மக்கள் வாழ்ந்ததாகவும், அதுவரை எந்தவொரு மயானமும் இருக்கவில்லை என்ற உண்மை முன்வைக் கப்பட்டவுடன் தொல்லியல் திணைக்களம் திணைக்களும் கூறியதைப் போன்று, உண்மையிலேயே அங்கு மயானம் ஒன்று இருந்ததாக வைத்துக் கொண்டாலும், இந்துக்கள் வாழ்ந்த அந்தப் பகுதியில் உள்ள மயானமும் இந்துமயானமாகவே இருந்திருக்கும். இந்துக்கள் உடல்களை புதைக்கும் வழக்கம் கொண்டார்கள் அல்லர். எரிக்கும் மரபைப் பேணுபவர்கள். எனவே எலும்புக்கூடுகள் யாவும் 300 வருடத்துக்கு முற்பட்ட மயானத்தில் புதைக்கப்பட்ட உடலங்கள் என்பதை ஏற்றுக் கொள்வதென்பது தர்க்கரீதியில் தோற்றுப் போன ஒரு வாதம் தான்.

இத்தகு நிலையில் குறித்த மனித எலும்புக் கூடுகள் எந்தகாலத்தில் புதைக்கப்பட்டவை,மற்றும் அவற்றின் மரபணு என்பன குறித்த சோதனைகள் செய்யப்பட்டால் உண்மை என்னவென்பது வெளிச்சமாகிவிடும். எனினும் அண்மையில் இது குறித்து கருத்து வெளியிட்ட பொலிஸ் தரப்பு, மேற்குறித்த பரிசோதனைகளுக்கு மில்லியன் கணக்கில் பணம் செலவாகும். எனவே அந்தப் பரிசோதனைகளை செய்வது இயலாத காரியம் என்று கை விரித்தது. நூற்றுக்கணக்கான மனித உயிர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிய, ஒரு அரசு பணம் செலவிடத் தயாராக இல்லை.

இது சிறுபான்மையினர் தொடர்பான இரு வழக்குகளும், அவற்றின் தற்போதைய நிலைகளும். ஆனால் இந்த வழக்குகளுக்குப் பின்னர் தென்னிலங்கையில் நிகழ்ந்த சிறுமி சேயா கொலை வழக்கு

(18 ஆம் பக்கம் பார்க்க)

ஊர் நாடகத்துக்கு அழிவில்லை

- தபின்

முந்தி ஏதும் ஊரில விழா எண்டா கட்டாயமாக கடைசிப் புரோகிராமா ஒரு நாடகம் இருக்கும். அநேகமாக அது சமூக நாடகமா இருக்கத்தான் சான்ஸ் கூட. அரச நாடகங்கள்(வரலாற்று, புராணக் கதைகள் கொண்டவை) எண்டா மேக்கப்புக்கு சிலவு கூட. சமூக நாடகங்கள் எண்டா ஆக மிஞ்சி டோப்புக்குத்தான் காசு. மீசை, தாடியெல்லாம் ஐ-புரோவாலையோ இல்லாட்டி கரியாலையோ னைக்கலாம். இயக்கமும் மேடையில நடக்கிற கூட்டமெண்டா சமூக நாடகமும், இல்லாட்டி தெருக்கூத்தும் போடுவாங்கள். இந்தச் சமூக நாடகங்களை சின்னில இருந்தே நாங்கள் 'ஊர் நாடகங்கள்' எண்டுதான் சொல்லுவம்.

இந்த ஊர் நாடகங்களுக் கெண்டு சில குணங்குறியள் இருக்கு. கந்தையாவோ மணியமோ பேப்பர் படித்துக் கொண்டிருக்கேக்க சீன் இழுபட்டு தொடங்கிற ஊர் நாடகம், ஒரு சுபத்தோட முடியும். அஞ்சாறு நிமிசத்துக்கொருக்கா சீன் இழுபட்டு காட்சியள் மாறிக்கொண்டே இருக்கும். சீன் காரரும் தங்கட பங்குக்கு அரண்மனை, றோட்டு, நந்தவனம், காடு,எண்டு மாறி மாறி சீனை மேடைக்கு பின்னுக்கு போட்டு வாய் பிளக்கச் செய்வினம். நாடகத்தில வாற எல்லாரும் நடுவில இருக்கிற மைக்கில தங்கட குரலை வரப் பண்ணுறதுக் காக அங்காலையும் இஞ்சாலை யுமா அலைவினம். அப்பிடி குறுக்க மறுக்க 2 பாத்திரமும் மாறி நடக்க வேணும் எண்டு கட்டாய விதி. இன்னொரு இம்போர்ட்டனான விதி என்னெண்டா நடிக்கிறவை பின்பக்கம் காட்டவே கூடாது. அதால கனதரம் எல்லாரும் ரிவேர்சிலயும் நடப்பினம். இல்லாட்டி பின்பக்கம் தெரிஞ்சிடுமெல்லோ.

2,3 காட்சியளுக்கு இடையில ஒரு சினிமாப்பாட்டு(இயக்க காலத்தில இயக்கப்பாட்டு) இருக்க வேணும். பொம்பிளைப் பாத்திரங்களும் பெடியள்தான் செய்வினம். இப்பிடி பொம்பிளை வேசம் போடுறவைக்கு பேசுற மேக்கப் பற்றி சொல்லி வேலையில்லை. கூலி வேலை செய்யிற குடும்பப் பொம்பிளையா இருந்தாலும் பிங்க் பவுடரெல்லாம் அப்பி, மினுங்கல் சீலை கட்டி, பூவெல்லாம் சரம் சரமா வைச்சு ஒய்யாரமாத் தான் மேடையில வருவினம். அதைவிட இடைக்கிடை ஒரு நடிகர்கொஞ்ச நேரம் குட்டி போட்ட பூனை மாதிரி, மற்ற நடிகரை முறைச்சுப் பாத்தபடி திரிவார்.

அவர் முழுசுவார். இவர் கடுப்பாகி அவருக்குக் கிட்டப்போய் காதுக்க அப்ப என்ன புதினம் எண்டு நீதான் கேக்க வேணும். உன்ர வசனம் தான். கேள் எண்டு சொல்லிப் போட்டு வருவார். அதுக்கிடையில காதுக்க சொன்ன ரகசியம் மைக்கின்ர உபயத்தில சனத்துக்கு கேட்டிடும்.

காட்சியளில லொஜிக், கிஜிக், மயிர், மட்டி ஒண்டும் பாக்காமல் நாடகத்தைப் பாக்க வேணும். இப்பிடி கனக்க கலக்கலான விசயங்கள் தான் சனத்தை ஈர்த்து வைச்சிருக்கும்.

சின்னனில இந்த ஊர் நாடகங்கள் தான் என்னையும் நாடகப்பக்கம் இழுத்துக் கொண்டு வந்தது. பாத்த நாடகங்களை கடை, கண்ணிக்கு போய் வரேக்க நானே தனிய நடிச்சுப் பாப்பன். அதைப் பாத்து விசர்ப்பெடி எண்டு போற வாற ஆக்கள் சிரிச்சவை எண்டு பிறகுதான் தெரியும். கொஞ்ச காலத்தில நானும் ஒரு ஊர்நாடகக் காரனாகிட்டன். 5 ஆம் ஆண்டில இருந்து நானே எழுதி, நடிக்கத் தொடங்கிட்டன். மாவீரர் நாளுக்கு பள்ளிக்கூடம் வந்த இயக்க அண்ணை என்ர நாடகத்தைப் பாத்து வெளியில நடக்கிற கூட்டத்திலயும் போய் கேட்டார். கருப்பு தின்னக் கைக்கூலி. ஓமெண்டிட்டன்.

பிறகு எங்க பள்ளிக்கூடத்தையும் தாண்டி கன இடங்களில இப்பிடி ஊர் நாடகம் போட்டம். ஆனா பிறகு இந்த நவீன நாடகங்கள் பற்றி தெரிய வந்து நான் அரங்கத்துறையில 'சாமத்தியப்பட்ட' பிறகு (17 வயதுக்கு பிறகு) ஊர் நாடகம் எண்டாலே தலை தெறிக்க ஓடிடுவன். சில நேரங்களில் தப்பித் தவறி அப்படியான ஊர் நாடகங் களைப் பாக்கவேண்டி வந்தால், நக்கலோட பாத்திட்டு அரை வாசியோட எஸ்கேப் ஆயிடுவன்.

இப்பிடி ஊர்நாடகங்களை நான் மறந்தே போன நேரத்தில அப்பிடியான ஒரு நாடகத்தை பழக்க கேட்டா எப்பிடி இருக்கும்? எண்ணாலும் மாட்டன் எண்டு சொல்ல முடியாது. ஏற்கனவே ஊர்ப்பக்கம் நான் தலை காட்டுறேல எண்டு நல்லபேர். இதுக்கும் மாட்டன் எண்டா திமிர் எண்டு முடிவு கட்டுறது நிச்சயம். அதோட பழக்கச் சொல்லிக் கேட்டவனும் எனக்கு வேண்டியவன்.

வாறது வரட்டும் எண்டு 17 வருசத்துக்குப் பிறகு பழைய படி ஒரு ஊர் நாடகத்தை பழக்க தொடங் கினன். எண்ணாலும் லைட்டா கொஞ்சம் புது விசயங்களை அவைக்கே தெரியாமல் தூவினன். பாட்டு, சிரிப்பு, லொஜிக் இல்லாத ஆனா சென்ரிமென்ராண கதை(?), நீதி போதனை இப்பிடி மனசில் லாமல் தான் நாடகம் தொடங் கிச்சு. ஆனா பழக்கேக்க ஒவ் வொருத்தரும் தங்கட பாத்திரத்தில காட்டின அக்கறையும், ஈடுபாடும் கொஞ்சம் என்னையும் விசுவாசமா பழக்க வைச்சுது. நான் சொல்றதை விட அவை கூடுதலா என்ன செய்து தங்கட கரக்டரை நல்லாச் செய்யலாம் எண்டு தாங்களே யோசிச்சாங்கள். 2 நாள் தான் ஒழுங்கான பழக்கல். அது கூட விழா வேலை செய்து முடிஞ்சு பெடியள் ஆய்ஞ்சு ஓய்ஞ்சு இருந்த நேரத்தில தான்.

கடைசிநாள். பங்ஷன் தொடங் கிட்டு. வழமை போல கடைசி புரோகிராம்தான் எங்கட நாடகம். அவங்கட நாடகம் எண்ட நிலைமை மாறி அந்த நேரத்தில எங்கட நாடகமா நெருங்கிட்டன். சின்னனில இருந்த பழைய பதற்றம்.

ஒண்டுக்கு வாற மாதிரி பீலிங். கடைசி நேரத்தில ஓர்கன் கழுத்தறுக்க, கொஞ்சம் சனத்தை பொறுமையிழக்க வைச்சுத்தான் நாடகம் தொடங்கிச்சு.

சனமெல்லாம் நக்கலடிச்சு, காறித் துப்ப ரெடியாக இருக்கிற மாதிரிக் கிடந்தது. நாடகம் முடிய எந்தப் பக்கத்தால நழுவலாம் எண்டுதான் யோசினை. ஆனா, நாடகம் தொடங்கி முடியும் வரை சனம் சிரிச்சுக் கொண்டே இருந்தது.

அந்தச் சிரிப்பில பொலித்தனம் இல்லை. அவையளின்ர உண்மையான சந்தோசம் தெறிச்சு பரவிச்சு. கிடியலுக்கு விசில் வேற. ஒரு புதுப்படம் தியேட்டரில ஓடுற மாதிரி. சின்னப்பிள்ளையா மாறின மாதிரி உணர்ந்தன். நாடகம் முடிய மனசுக்க சொல்லிக் கொண்டன்.

ஊர்நாடகத்துக்கு சாவில்லை.

30 வருடங்களாக நீடித்த போர் இலங்கையில் முடிவை எந்த போதிலும், ஏறக்குறைய அதே ஆயுளைக் கொண்ட அரசியல் கைதிகள் தொடர்பான விவகாரம் மட்டும் வந்தவித முன்னேற்றமுமின்றி தொடரவே செய்கின்றது. தம்மை விசாரணை செய்யுங்கள் அல்லது விசாரணை செய்யுங்கள் என்று அரசியல் கைதிகளும் பல வருடங்களாக சிறைக்குள் இருந்தவாறே போராடி வருகின்றனர். சில சமயங்களில் அவ்வாறான போராட்டங்களை ஆட்சியாளர்கள் இருந்துக்கரம் கொண்டு நசுக்கியதும் உண்டு. போராட்டத்தை முன்னின்று செயற்படுத்தும் கைதிகள் திட்டமிட்ட வகையில் கொல்லப்படுவதன் மூலமோ அல்லது தனிமைப்படுத்தப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதன் மூலமோ ஏனைய கைதிகளின் உளவுரணைச் சிதைத்து, அவர்களின் போராட்டங்களை அப்போதைக்கு இல்லாமல் செய்வதையே அரசயந்திரம் வழக்கமாகக் கொண்டிருந்தது.

இதுவரை இலங்கையில் நீடித்த இத்தகைய அராஜக ஆட்சிக்கு முடிவு கட்டி, நல்லாட்சி கொண்டு வரப்பட்டுவிட்டதாக உலகமெங்கும் பிரசாரம் பண்ணப்படுகையில் கூட தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளுக்குள் தங்கள் விடுதலை எப்போது என்று தெரியாமல் அடைபட்டுக் கிடக்கிறார்கள். அப்படி 10, 15 வருடங்களுக்கும் மேலாக குறித்த அரசியல் கைதிகளை அடைத்து வைப்பதற்கான காரணம் என்ன என்று ஆராய்ந்தால், எதுவுமில்லை என்பதாகவே விடை கிடைக்கும். அடைபட்டிருக்கும் அரசியல் கைதிகள் அனைவருமே பெரும்பாலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களே. இன்னும் சிலர் போராளிகளுக்கு உணவு கொடுத்தார்கள், தங்குவதற்கு வீடு கொடுத்தார்கள் என்ற தகவலின் அடிப்படையில் பிடிக்கப்பட்டவர்களே. பாரதூரமான குற்றம் செய்தவர்கள் கிடையாது. இதைவிடப் பாரதூரமான குற்றங்கள் செய்தார்கள் என்று எல்லோருக்குமே தெரிந்த பலர் சுதந்திரமாக வெளியில் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் அரச பாதுகாப்புடன் சுகபோகமாக இருக்கிறார்கள். சுறாக்களை தன் நிதியுதவியுடன் இஷ்டப்படி நீந்தித்திரிய விட்ட அதே அரசுதான், அப்பாவிகளை அரசியல் கைதிகளாக்கி இரும்புக் கூண்டுக்குள் அடைத்து வேடிக்கை பார்க்கிறது.

எத்தனை நாளுக்குத்தான் அரசியல் கைதிகளும் 'இன்றைக்கு விடுதலை, நாளைக்கு விடுதலை' என்ற நினைப்பில் வாடுவது? முடிவிலியான இருப்பு வாழ்வுக்கு எப்படியாவது முடிவு கிடைக்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு பழையபடி உணவுத்தவிர்ப்புப் போரில் குதித்தார்கள். இம்முறை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியாக கூட்டமைப்பு இருப்பதாலும், கடந்த காலங்களில் அரசியல் கைதிகளுக்காகக் குரல் கொடுத்து வந்த மனோ கணேசன், றக்கீம் உள்ளிட்டவர்கள் நல்லாட்சி அரசில் அங்கம் வகிப்பதாலும் அரசியல் கைதிகளின் குரல் கடந்த காலங்களை விடவும் இம்முறை அதிக கவனக்கோரலைப் பெற்றது.

தமிழ்ப் பகுதிகளில் அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெற்றன. சில அமைச்சர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் கைதிகளைச் சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்தனர்.

ஒருபுறம் கைதிகளின் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், மறுபுறம் பழைய அரசுகளின் தொனியில் நல்லாட்சி அரசின் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அரசியல் கைதிகள் என்ற எவரும் இலங்கையில் இல்லை என்று கூவத் தொடங்கினார். ஆனால் என்ன நடந்ததோ தெரியவில்லை. அடுத்த நாளே சுருதியை மாற்றிக் கொண்டு, இந்த வருட இறுதிக்குள் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பேன் என்று உறுதி வழங்கினார். அதேவேளை சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்தித்த இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனோ கைதிகளை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிப்பதென்பது உடனடிச் சாத்தியமில்லை. அரசியல் கைதிகள் அனைவரையும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தி, அதன் பின்னர் விடுவிக்க அரசு ஆலோசிக்கிறது. எடுத்த எடுப்பிலேயே விடுவிக்க கோருவதை விடுத்து, இப்படியான சாத்தியவழிமுறைகளை நடைமுறைப்படுத்த அரசியல் கைதிகளும் விட்டுக் கொடுப்புடன் நடக்க வேண்டும் என்ற சாரப்படக் கூறியிருந்தார்.

ஆனால் உண்ணா நோன்பிருந்த கைதிகளைப் பார்க்கச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், கைதிகளின் பிரச்சினை குறித்து தொலைபேசி மூலம் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு எடுத்துரைத்தார். சம்பந்தன் கூறியதை செவிமடுத்த ஜனாதிபதி இந்த வருடத்துக்குள் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார். இந்தத் தகவலை சம்பந்தன் கைதிகளுக்கு விளக்கிய பின்னரே அவர்கள் தங்கள் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட இணங்கினர்.

சம்பந்தனுக்கு அரசின் தலைவரான ஜனாதிபதி, கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதன் பின்னரே, விஜயகலா மகேஸ்வரன் 'புனர்வாழ்வளிப்பின் பின்னே விடுதலை' என்ற அரசின் திட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். புனர்வாழ்வோ, இடர்வாழ்வோ என்ன நடந்தாலும் பரவாயில்லை, தங்களை விடுவித்தால் போதும் என்ற நிலையில்தான் கைதிகள் இருக்கிறார்கள். இத்தனை வருடங்கள் சிறையில் தடுத்து வைத்தும் அரசின் ஆத்திரம் தீரவில்லையா? இனியும் புனர்வாழ்வு என்ற பெயரில் சிலகாலம் உள்ளேயே வைத்திருக்க அரசு விரும்புகிறது போலும் என்று கைதிகளில் ஒரு பகுதியினர் தெரிவிக்கின்றனர். இன்னொரு தரப்பினரோ இத்தனை வருடம் அடைபட்டுக் கிடந்துவிட்டோம். சரி, இன்னும் ஒரு வருடம் புனர்வாழ்வு தந்துவிட்டு வெளியே விட்டால் போதும் என்ற மனோ நிலையில்தான் இருக்கிறார்கள்.

நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னதாக குறைந்தது 70 அரசியல் கைதிகளை அரசு பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதுவும் நடந்த பின்னர்தான் அதனை நம்பும் நிலையில் கைதிகள் உள்ளனர்.

இம்முறையும் அரசு அரசியல்கைதிகளை விடுவிக்காமல் பழையபடி காலத்தை இழுத்தடித்தால், கைதிகளின் கோபம் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மீதே திரும்பக் கூடும். ஏனெனில் இந்த முறை சம்பந்தனின் உறுதிமொழியின் பேரிலேயே கைதிகள் உண்ணாவிரதத்தினைக் கைவிட்டிருந்தனர். ஆகவே அவர்களை விடுவிக்க ஏதும் நடவடிக்கைகள் இடம்பெறாவிட்டால், உங்களால் தானேபோராட்டத்தைக் கைவிட்டோம். ஆனால் நீங்களும் எங்களைக் கைவிட்டு விட்டீர்களே என்று அரசியல் கைதிகள் சம்பந்தரை நோக்கி சொல்லம்புகளை வீசக்கூடும். எனவே இத்தகைய தர்மசங்கட நிலை தோன்றாதிருக்க வேண்டுமானால், இவ்வளவு காலமும் சிரத்தையோடு கையாண்ட அரசியல் கைதிகளின் பிரச்சினையை இனியாவது அக்கறையோடு கையாண்டு, அரசுக்கு கடும் அழுத்தத்தைக் கொடுத்து, அதன் மூலம் கைதிகளை விடுவிக்க கூட்டமைப்பும் அதன் தலைவரும் முயல வேண்டும்.

- ஜனகா

சம்மசொப்பனம் - 44



கம்யூனிஸ்ட் கட்சியால் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியாது எனும் முடிவுக்கு அவர் முன்னரே வந்து, சேர்ந்திருந்தார். ஆட்சியில் இருந்த அரசு எப்போதும் கம்யூனிஸ்ட் கட்சியை ஒடுக்கிக் கொண்டிருந்தது. மச்சாடோ, கிராவ், பிரியோ, பாடிஸ்டா அனைவருமே கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியைப் பெருமளவில் கட்டுப்படுத்தி வைத்திருந்தனர். இடையே 'மக்கள் சோஷிலிச இயக்கம்' என்று பெயர் மாற்றம் செய்து கொண்டு கம்யூனிஸ்ட் கட்சி இயங்க முயற்சி செய்தது. ஆனால் அரசை எதிர்த்து நின்று போராட இயக்கத்தால் இயலவில்லை. புரட்சி சாத்தியமில்லை என்று அவர்கள் திடமாக நம்பினர். 'போரட்டத்துக்காக இளைஞர்களைக் கவர்ந்திழுப்பது சாத்தியமில்லை. அப்படிச்செய்தால் அது விபரீத விளைவுகளையே ஏற்படுத்தும். போராட்டம் கனிவதற்கான சூழல் அமையும் வரை காத்திருப்பது தான் ஒரே வழி!" என்று கருதினார்.

'சூழல் அமையும் வரை காத்திருப்பது' என்பது காஸ்ட்ரோவுக்கு ஒத்துவராத சங்கதி. சூழல் தானாக உருவாகாது, அதை நாம் தான் உருவாக்க வேண்டும் என்பது அவரது நம்பிக்கை. ஆனால், கம்யூனிஸ்ட் கட்சியால் காத்திருக்கவே முடியும் என்பது அவருக்குத் தெரியும். கம்யூனிஸ்ட் கட்சி பழமையில் ஊறிப் போயிருந்தது. காஸ்ட்ரோ மார்க்சிய வழிகளை ஏற்றுக் கொண்டார் என்ற போதிலும் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்வதில் ஆர்வம் இல்லாதவராக இருந்தார். அவரது வார்த்தைகளில் கூறவேண்டுமானால் அமெரிக்காவில் தங்கியிருந்த மூன்று மாத காலத்தின் போதே நான் மார்க்கசிய வழியை ஏற்கத் தொடங்கிவிட்டேன். அமெரிக்காவை எதிர்த்து நிற்க ஒரு இலட்சியம் தேவை என நினைத்த போது, பேராயுதமாக மார்க்சியம் தான் என் முன் தோன்றியது' என்கிறார்.

ஆர்தோடாக்ஸ் கட்சியின் நிலைமையும் கிட்டத்தட்ட இது தான். காஸ்ட்ரோ தன்னால் இயன்றவரை ஆர்தோடாக்ஸ் கட்சித் தலைமையுடன் பேசிப் பார்த்தார். புரட்சியின் மூலம் பிரியோவின் சர்வாதிகார ஆட்சியை முறியடிக்கலாம், அதற்கான திட்டங்கள் தன்னிடம் இருக்கின்றன என்றார். ஆனால், கட்சி அவரது திட்டங்களை நிராகரித்தது. அத்தகைய ஒரு புரட்சி சாத்தியமல்ல, அரசுக்கு எதிராக மக்களை திரட்டுவது சாதாரண பணி அல்ல, அதற்கான தருணம் இதுவல்ல என்பதே அவர்களது கருத்து.

சொற்சிலம்பம் போட்டி இல. 695



அனுப்புபவர் பெயர்:.....

விலாசம்:.....

.....

கையொப்பம்:.....

சொற்சிலம்பம் போட்டி இல. 695

சொற்சிலம்பம் போட்டி 695ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு. நவம்பர் 04 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே நவம்பர் 11ஆம் மற்றும் நவம்பர் 18ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ். அலுவலகம்,

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மேலிருந்து கீழ்

1. ஆபத்துச் சமயத்தில் உதவுபவன்.
2. இது இனிப்புச் சுவை கொண்டது.
3. மருத்துவக் குறிப்பு.
4. சுருக்கு.
5. பன்மைத்தன்மையைக் குறிப்பது.
8. அடிவயிறு.
9. கீர்த்தி.
10. சகோதரர்களில் மிக மூத்தவன்.
13. கொடைவள்ளல்.
15. மன்மதன் மனம் கவர்ந்தவள்.
16. வேற்றுவன்.
17. நினைக்க.
19. சாப்பிடு.

இடமிருந்து வலம்

1. இதற்கு முன்னர் பதவி வகித்த பாப்பரசரது தமிழ்ப்பெயர்.
6. குளிர்காலத்தில் பொழிவது.
7. தாண்டி வா.
8. தேகம்.
11. இந்திய தேசம்.
12. இந்த மான் இனம், மயிர் இழந்தால் உயிர் வாழாதாமே?
13. சீர் கெட்ட நிலை.
14. வெவ்வேறு ரகப்படுத்து.
17. கணக்கில் முக்கியமானது.
18. வாழ்.
19. சாப்பிட.
20. சகோதரர்கள் வரிசையில் கடைசியானவன்.

போட்டி இல. 692இல் பரிசு பெற்றோர்

1 ஆம் பரிசு

க.தில்லை,
வேரற்கேணி கந்தசுவாமி கோவிலடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

2 ஆம் பரிசு

க. கௌரிதேவி,
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

3 ஆம் பரிசு

செ. தவலிங்கம்,
'தசபவனம்',
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

சொற்சிலம்பம் போட்டி இல. 693க்கான விடைகள்

மேலிருந்து கீழ்

1. திராட்சை.
2. ருசி.
3. தரணி.
4. தையல்.
5. அன்னாசி.
8. தர்மம்.
9. தடித்த.
11. வசனம்.
12. வன்மம்.
14. தருமன்.
15. காதல்.
17. திமில்.
19. மீன்.

இடமிருந்து வலம்

1. திருத்தந்தை.
6. ராசி.
7. யமன்.
8. தணிதல்.
10. சைவர்.
12. வசி.
13. சமர்த்தன்.
15. கானம்.
16. தருமதி.
18. தம்.
20. மம்மி.
21. மன்னன்.

வடக்கின் சூரனைசாரதேரர்

- ஆசாத்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையின் வனவளத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மரநடுகை வாரத்தை அங்குராார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும் போது, தற்சமயம் இலங்கையின் வனவளம் 29 வீதமாகச் சுருங்கி விட்டதெனவும் இதை 32 வீதமாக உயர்த்தும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். மேலும் அவர் வடக்குக் கிழக்கில் வனவளம் போர்க்காலத்தில் சிதைவடையாமல் தகுந்த முறையில் பாதுகாக்கப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

போர்க்காலத்தில் விடுதலைப்புலிகள் காடுகளைப் பாதுகாப்பதில் தீவிர அக்கறை காட்டி வந்தனர். அது மட்டுமன்றி தேக்கம் கன்றுகளை நட்டு நீருற்றி புதிய காடுகளையும் உருவாக்கி வந்தனர். மழை பெய்வதற்கும், இயற்கைச் சமநிலையைப் பேணவும், மிருகங்கள், பறவைகள் வளத்தைப் பாதுகாக்கவும் வனங்களைப் பேணுவது அவசியம் என்பதை உணர்ந்து அதற்கென வனவளத்துறை என ஒரு பிரிவையே உருவாக்கியிருந்தனர்.

ஆனால் போர் முடிவுக்கு வந்த பின்பு அரச படையினராலும், சில அரசியல் வாதிகளாலும் எவ்வித கட்டுப்பாடுமின்றி காடுகள் அழிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா கூட தான் திட்டமிட்ட அதிகாரியாக பதவி வகித்த போது பாவனையற்ற காணிகளைப் பாவனைக்கு உட்படுத்துவது என்ற பேரில் எமது பகுதியின் பெரும் மரங்கள் வெட்டப்பட்டு தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.

இராணுவக் குடியிருப்புக்கள் அமைப்பது என்ற பேரில் கிளிநொச்சியில் 4,000 ஏக்கர் காடு அழிக்கப்பட்டதையும், அக்கராயன் வன்னேரியில் உள்ள காட்டில் பெரு மளவு பாலை, முதிரை, மகோகனி போன்ற மரங்கள் சட்ட விரோதமாகத் தறிக்கப்பட்டு தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டதையும் இங்கு பதிவு செய்தாக வேண்டும்.

ஆனால் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்பு வடபகுதியில் இந்தக் காடழிப்பு நடவடிக்கைகள் ஓய்ந்து விட்டது போலவே காணப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி வனவளம் பெருக்க மரநடுகை வாரம் கொண்டாடிக் கொண்டிருக்கும் போது, அவரின் அமைச்சரவை அமைச்சர் ரிசாட் பதியூதீனின் ஆதரவாளர்களால் காடழிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அதாவது ஜனாதிபதி ஒரு புறமும் அவரின் அமைச்சர் எதிர்ப்புறமும் பயணிக்கும் நிலைமையைக் காணக்கூடியதாயுள்ளது.

முல்லை மாவட்டத்திலுள்ள குமுழமுனை, கருகஞ்சோலை, கற்பூரவள்ளி, வன்னி மேடு ஆகிய பகுதிகளிலுள்ள காடுகள் புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஒரு சிலரால் அமைச்சர் ரிசாட் பதியூதீனின் அனுசரணையுடன் அழிக்கப்பட்டு குடியேற்ற முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

வன்னிமேடு, கற்பூரப்புல்வெளி என்பன அந்நியருக்கு எதிராக பண்டார வன்னியன் வீரப்போர் புரிந்த இடங்கள் என புனிதமாகப் போற்றப்படும் இடங்களாகும். அதே போல் ஒல்லாந்தர் பாக்கு மரங்களைத் தறிப்பதை எதிர்த்து மக்கள் போராட்டம் நடத்திய இடமே கருகஞ்சோலையாகும்.

இந்த இடங்கள் ஆக்கிரமிக்கப்படுவது ஒரு புறம் காடு அழிப்பாக உள்ள அதேவேளையில், இன்னொரு புறம் தமிழ் மக்களின் உணர்வுகளுடன் உரசிப் பார்க்கும் ஒரு முயற்சியாகும்.

அமைச்சர் ரிசாட் பதியூதீனின் இத்தகைய நடவடிக்கை இது தான் முதல் தடவையல்ல. ஏற்கனவே முள்ளியவளையில் தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுப் பின் மக்கள் போராட்டம் காரணமாகக் கைவிடப்பட்டது. மீளக்குடியேற்றம் மேற்கொள்ளல் என்ற பேரில் தேக்க மரங்களை வெட்டி எடுத்த முயற்சியும் மக்களால் தடுக்கப்பட்டது.

போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவது என்ற பெயரிலேயே தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சிகளும் வளமான காடுகளை அழிக்கும் நாச நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தங்கள் சொந்தக் காணிகளில் குடியேறுவதை எவரும் தடுக்கவில்லை.

ஆனால் இடம்பெயர்ந்தவர்களின் வாரிசுகள் எனக் கூறிக்கொண்டு புத்தளம் வாரிசுகள் வந்து புதிய இடங்களை ஆக்கிரமிப்பதைத் தான் மக்கள் எதிர்க்கின்றனர்.

இந்தப் பகுதியில் 77 முஸ்லிம் குடும்பங்களுக்கு அரை ஏக்கர் வீதம் 1981 ஆம் ஆண்டு காணிகள் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. அப்படியானாலும் கூட முப்பத்தியெட்டு ஏக்கரே வழங்கப்பட்ட காணியாகும். ஆனால் தற்சமயம் அங்கு பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. தனி ஒருவர் 20 ஏக்கர் நிலத்தைக் கைப்பற்றி வைத்திருப்பதாகவும்

(22ஆம் பக்கம் பார்க்க)



கடும் தொழில் போட்டி

த[illegible]ப்பட உலகின் இளம் கதாநாய[illegible]களான ஸ்ரீதிவ்யாவுக்கும், கீர்த்தி சுரேசுக்கும் இடையே கடும் தொழில் போட்டி உருவாகி இருக்கிறது. ஸ்ரீதிவ்யாவுக்கு செல்ல இருந்த இரண்டு புதிய பட வாய்ப்புகளை கீர்த்தி சுரேஷ் தட்டிப்பறித்து விட்டாராம்.

ஸ்ரீதிவ்யாவை விட அதிக கவர்ச்சி காட்டி நடிக்க நான் தயார் என்று கூறி, அந்தப் பட வாய்ப்புகளை கீர்த்தி சுரேஷ் பிடித்ததாக கூறப்படுகிறது. இதைக் கேள்விப்பட்டதும், கீர்த்தி சுரேசை விட அதிக கவர்ச்சியாக நடிக்க நான் தயார்என்று ஸ்ரீதிவ்யா அறிவித்து இருக்கிறாராம். ஆமாம், சரியான போட்டி தான்! ரசிக்க தயாராகி விட்டார்கள் ரசிகர்கள்.

மீண்டும் முதல் காத[illegible] திரும்பிய த்ரிஷ[illegible]

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக தென்னிந்திய திரையுலகில் மு[illegible] நடிகைகளில் ஒருவராக விளங்கி வரும் நடிகை த்ரிஷா சமீபத்தில் பிரபல தொ[illegible] மணியன் அவர்களைக் காதலித்து அவருடன் திருமண நிச்சயதார்த்தம் செய்[illegible] பின்னர் அதை அவர் முறித்து கொண்டார் என்பதையும் அனைவரும் அறிவ[illegible] த்ரிஷா மீண்டும் தனது முதல் காதலுக்கு திரும்பியுள்ளதாக தனது சமூக வ[illegible] தெரிவித்துள்ளார்.

சூரியன் மறைந்த பின்னர் நீச்சல் குளத்தில் ஜாலியாக குளிப்பதுதான் த[illegible] காதல் என்று அவர் அடிக்கடி பல பேட்டிகளில் கூறியுள்ளார் என்பது குறிப்[illegible] சமூக வலைத்தள பக்கத்தில் நீச்சல் குளத்தில் இருப்பது போன்ற புகைப்பட[illegible] ஆச்ஞிடு 2 ட்தூ 1ண்ணா டுணிதினு என்றும் த்ரிஷா குறிப்பிட்டுள்ளார்.

த்ரிஷா நடித்த தூங்காவனம் வரும் தீபாவளி தினத்தில் வெளியாகவுள்ள [illegible] தற்போது அரண்மனை 2, போகி, நாயகி போன்ற படங்களில் நடித்து வருகி[illegible]

நடிப்புக்கு முழுக்கா நவ்யாநாயர்

அழகிய தீயே, ராமன் தேடிய சீதை உள்ளிட்ட படங்களில் நடித்திருப்பவர் நவ்யா நாயர். கேரளாவில் வசித்து வந்த இவர் தற்போது குடும்பத்துடன் மும்பையில் செட்டிலாகிவிட்டார்.

கேரளாவில் நான் இருந்தபோதும் படப்பிடிப்புக்காக வெளியூர் சென்றுவிடுவதால் அங்கு தொடர்ச்சியாக வாழ்ந்ததில்லை. நாகரீக வளர்ச்சி, பேஷன் டிரெண்ட் போன்றவற்றில்கூட அங்கு எனக்கு சரியான புரிதல் இல்லை. மும்பையில் குடியேறிய பிறகுதான் இதையெல்லாம் அனுபவிக்கிறேன். ஒரு நடிகையாக இருந்தாலும் கதந்திரமாக சுற்றிதிரிய முடிகிறது. என்னுடைய உடை விஷயத்திலும் நிறைய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

வெற்றி கிடைக்குமா?

முன்னாள் உலக அழகி பிரியங்காசோப்ரா பீப்பிள்ஸ் சொய்ஸ் விருதுக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.முன்னாள் அழகியும், திரைப்பட நடிகையுமான பிரியங்கா சோப்ரா, தற்போது அமெரிக்க தொலைக்காட்சித் தொடர் கோண்டிகோ வில் நடித்து வருகிறார். இதன் மூலம் சர்வதேச அளவில் அவரது புகழ் உயர்ந்துள்ளது. அதிக பார்வையாளர்களைக் கவர்ந்த தொடர் என்ற பெருமையும், இந்தத்தொடருக்கு உள்ளது.

தற்போது பீப்பிள்ஸ் சொய்ஸ் எனும் விருதுப்பட்டியலில் மனம் கவர்ந்த ரீ.வி தொடர் நடிகை என்ற விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார். நடித்த முதல் வருடத்திலேயே, முதல் முறையாக இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டிருப்பது தனக்குப் பெருமையாக உள்ளது என பிரியங்கா தனது டுவிற்றர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

மேலும் பிரியங்கா சோப்ராவுக்கு வாக்குப் போட விரும்புகிறவர்கள், பீப்பிள்ஸ்சொய்ஸ்.கொம் என்ற இணையதளத்திலும், முகப்புத்தகம், டுவிற்றர் போன்ற சமூகவலைதளங்கள் மூலமும் தங்கள் ஆதரவை ஒக்ரோபர் 22 க்குள் தெரிவிக்கலாம். இந்த விருதுக்கான முடிவுகள் ஜனவரி 6 ஆம் திகதி அன்று அறிவிக்கப்படும்.

ல் காதலுக்கு த்ரிஷா

ய திரையுலகில் முன்னணி
ீபத்தில் பிரபல தொழிலதிபர் வருண்
திச்சயதார்த்தம் செய்து கொண்டதும்,
அனைவரும் அறிவர். இந்த நிலையில்
ாக தனது சமூக வலைத்தளத்தில்

குளிப்பதுதான் தன்னுடைய முதல்
ார் என்பது குறிப்பிடத்தக்கது. தனது
போன்ற புகைப்படத்தை பதிவு செய்து
பிட்டுள்ளார்.
வெளியாகவுள்ள நிலையில் அவர்
களில் நடித்து வருகிறார்.

தமிழ் மறுபதிப்புக்குத் தடை வருமா?

இரண்டே படங்களில் இளைஞர்களின் இதயங்களில் இடம்பிடித்துவிட்ட ஜி.வி.பிரகாஷ் தற்போது கெட்ட பையன் இந்த கார்த்தி, புருஸ் லீ ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இதில் புருஸ் லீ படத்தை இயக்குநர் சீஸன் 4ல் பங்குபெற்ற பிரசாந்த் அறிமுகப் படமாக இயக்குகிறார். இந்தப்படத்தில் ஜி.வி.பிரகாஷுக்கு ஜோடியாக நடிக்க, தெலுங்கு நடிகை கீர்த்தி கர்பந்தா தமிழில் முதல்முறையாக களமிறக்கப்படுகிறார்.

படத்தின் கதைப்படி பயந்த சுபாவமுள்ள இளைஞன் ஒருவன் தன்னை புருஸ் லீ போல் நினைத்துக் கொண்டு செய்யும் சேட்டைக்காகத்தான் இந்தப்பெயர் வைக்கப்பட்டிருக்கிறதாம். இந்தப்படத்தில் ஜி.வி.பிரகாஷ், நடிகர் மன்சூர் அலிகானின் ரசிகராக நடிக்கிறார். அவருக்கு பதாகைகள் வைப்பது, பாலாபிஷேகம் செய்வது என யாரும் எதிர்பார்க்காத ஒரு புது ஜி.வி.யை புருஸ் லீயில் பார்க்கலாம் என்கிறார்கள்.

பெற்றோரிடமே சம்பளம்

சமீபத்தில் சமந்தா வீட்டில் வருமான வரி துறையினர் சோதனை நடத்தியபோது அவரது பெற்றோர் வீட்டுக்கு பேட்டி எடுக்க ஊடகவியலாளர்கள் சென்றனர். அவர்களை சமந்தாவின் தாயாரும், சகோதரும் தாக்கினர். அப்போது கூறிய சமந்தாவின் தந்தை,சமந்தா எங்கு இருக்கிறார் என்று தெரியாது. நாங்கள் தனியாக வாழ்கிறோம் என்றார். கோடிக்கணக்கில் சமந்தா சம்பாதிக்கிறார் என்று அடிக்கடி தகவல் வந்தாலும் குடும்பத்தினர் சாதாரண அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கிறார்களா என்று திரையுலகில் சிலர் முணுமுணுத்தனர். ஆனால் தான் சம்பாதிக்கும் பணத்தை பெற்றோரிடம் கொடுக்கும் நடிகை இருக்கிறார். ரஜினியுடன் லிங்கா படத்தில் நடித்த சோனாக்ஷி சின்ஹா தான் அவர்.

இதுபற்றி சோனாக்ஷி கூறும்போது,கல்லூரியில் படிக்கும்போது பேஷன் வீக் நிகழ்ச்சிக்காக பணியாற்றினேன். தினமும் ரு.500 சம்பளம். அதில் வந்த 3ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை என் பெற்றோரிடம் கொடுத்தேன். எனது அம்மா அந்த காசோலையை ஃபிரேம் போட்டு எனக்கு பரிசாக அளித்தார். தபாங் படத்தில் நடித்தபோது முதல் சம்பளம் பெற்றேன். அதையும் பெற்றோரிடம்தான் அளித்தேன்.இதில் சிறு பகுதியை சல்மான் கான் நடத்தும் அறக்கட்டளைக்கும் வழங்கினேன். இன்றுவரை எனது சம்பளத்துக்கான காசோலை முழுவதையும் பெற்றோரிடம்தான் அளிக்கிறேன். எனக்கு பணம் தேவையென்றால் அவர்களிடம் கேட்டு வாங்கிக்கொள்வேன் என்றார்.

ஆர்யா இணைகிறார் தமன்னாவுடன்!

ஆல் இன் ஆல் அழகுராஜா படம் வெளிவந்து நீண்ட இடைவெளிக்குப் பிறகு இயக்குநர் ராஜேஷ் இயக்கும் புதிய படத்தில் ஆர்யா நடிப்பதோடு படத்தைத் தானே தயாரிக்க உள்ளார் ஆர்யா. இந்தப்படம் பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தின் பார்ட் 2 என பலரும் கூறிய வேளையில் இது முற்றிலும் வேறு கதை , வேறு தீம் என கூறியுள்ளார் ராஜேஷ். ஆர்யா, சந்தானம் நடிக்கும் இந்தப் படத்தில் நாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார் தமன்னா. தமன்னாவும் ஆர்யாவும் நடிக்கும் முதல் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து தனது டுவிற்றர் தளத்தில், ராஜேஷ் மற்றும் ஆர்யாவுடன் இணையும் புதிய படத்தின் படப்பிடிப்பு தொடங்க உள்ளது. என்னால் இனியும் காத்திருக்க முடியாது எனவும் ஜாலியான படப்பிடிப்பை எதிர்நோக்கியிருக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார் தமன்னா.

முழுக்கால நோய்களைத் தடுக்கும் வழிகள்!

மழைக்காலம் ஆரம்பமாகி விட்டது. இதன்காரணமாக, சாதாரண சளி, காய்ச்சல் முதல் டெங்கு காய்ச்சல், தொற்றுநோய்கள் வரை படையெடுக்க ஆரம்பித்துவிடும். நோய்க்கிருமிகள் பரவ, மிகவும் சாதகமாக இருக்கும் குளிர்ச்சியான மற்றும் ஈரப்பதமான சூழ்நிலைதான் இதற்குக் காரணம்.

ஆங்காங்கே நீர் தேங்குவதால், கொசு மற்றும் ஈக்கள் மூலம் பரவும் பாதிப்புகளும் அதிகரித்துவிடுகின்றன. மழைக்காலப் பாதிப்பில் இருந்து தப்புவதே ஒவ்வோர் ஆண்டும் மிகப் பெரிய சவால். இந்த நேரத்தில் வரக்கூடிய நோய்கள் என்னென்ன? அவை ஏன் வருகின்றன? அவற்றை எப்படித் தவிர்ப்பது?

சளி, இருமல்

பருவநிலையில் மாற்றம் ஏற்பட்டு, காற்றில் ஈரப்பதம் அதிகரிப்பதால், குளிர்ச்சியான சூழ்நிலை சிலருக்கு அலர்ஜியை உண்டாக்கும்; சளி மற்றும் இருமல் பிரச்னைகளால் அவதிப்படுவார்கள். இன்ஃப்ளுவன்சா வைரஸ் காரணமாகவும் சளி இருமல் வரும். இந்தப் பிரச்சினைகள் வராமல் இருக்க, வெளி இடங்களில் சுகாதாரமற்ற தண்ணீர் மற்றும் குளிர்பானங்கள் அருந்துவதையும், ஐஸ்கிரீம் சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும். அடிக்கடி ஆவி பிடிப்பது, மூச்சுப் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் சளி, இருமல் பிரச்னைகளில் இருந்து தப்பிக்கலாம்.

நுரையீரல் தொந்தரவுகள்

மழைக்காலம் மற்றும் குளிர்காலங்களில் உலர்ந்த மற்றும் குளிர்ந்த காற்றை மாறி மாறி சுவாசிக்கும்போது, நுரையீரல் மற்றும் தொண்டைப் பகுதிகளில் எரிச்சல் ஏற்படும். இதனால், தொண்டைக் கரகரப்பு வரலாம், நெஞ்சுச்சளி கட்டிக்கொள்ளும். ஆஸ்துமா, நாள்பட்ட மூச்சுக் குழாய் அடைப்பு நோய் போன்ற வற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூச்சுவிட மிகவும் சிரமமாக இருக்கும். நெற்றி மற்றும் கன்னங்களில் இருக்கும் சைனஸ் அறைகள், தொற்று காரணமாக பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம். இதனால், சைனஸ் தலைவலி வரலாம்.

காலையில் படுக்கையில் இருந்து எழும்போது, பயங்கர மாக தும்மல் வரும். கன்னங்களில் வலி இருக்கும். நுரையீரலில் ஏற்படும் வைரஸ், பாக்டீரியா, பூஞ்சண தொற்று போன்றவற் றால், நிமோனியா காய்ச்சல் வரலாம். நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த குழந்தைகள், முதியவர்களுக்கு இந்த காய்ச்சல் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

கொசு

நீர் நிலைகள் இருக்கும் இடத்தில் கொசுக்கள் கட்டாயம் இருக்கும். அதுவும் மழைக்காலத்தில், எல்லா இடங்களிலும் தண்ணீர் தேங்கி கொசுக்கள் உற்பத்திக்கு உதவுகின்றன. இதில், முக்கியமானது மலேரியா காய்ச்சலை உருவாக்கும் கொசு.

'அனோபீலஸ்' என்ற பெண் கொசுதான் மலேரியா காய்ச்சலுக்கு மிக முக்கிய காரணம். இந்தக் கொசு ஒருவரைக் கடித்து, மற்றொருவரைக் கடிக்கும்போது, அதன் எச்சில் வழியாக கிருமிகள் பரவி, மலேரியா காய்ச்சல் ஏற்படுகிறது. மலேரியா காய்ச்சலை ஏற்படுத்தும் ஒட்டுண்ணி, உடலுக்குள் சென்று, சாதகமான காலம் வரும் வரை காத்திருக்கும். நோய் எதிர்ப்பு சக்தி குறைந்ததும் காய்ச்சல் வரும்.

மலேரியாவுக்கு அடுத்தபடியாக நாட்டையே பயமுறுத்தும் கொசு, டெங்குவைப் பரப்பும் 'ஏடிஸ் எஜிப்டி'. இந்தக் கொசு, அசுத்தமான நீர் நிலைகளில் வாழாது. எனவே, சாக்கடைகளில் இந்தக் கொசு உற்பத்தி ஆவது இல்லை. வீட்டைச் சுற்றி இருக்கும் தேங்காய்ச் சரடுகள், ஓடுகள், பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்கள் போன்றவற்றில் தேங்கும் மழைத் தண்ணீரில் இருந்துதான் இந்தக் கொசுக்கள் உற்பத்தியாகின்றன. வீட்டைச் சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொண்டாலே, டெங்கு காய்ச்சலைத் தவிர்க்க முடியும்.

'ப்ளேவி வைரஸ்' என்ற வைரஸ் காரணமாக ஏற்படும் நோய், 'யெல்லோ ஃபீவர்'. இதுவும் 'ஏடிஸ் எஜிப்டி' கொசு மூலம்தான் பரவுகிறது. காய்ச்சல், தலைவலி, தசைகள் வலி, வாந்தி எடுக்கும்போது ரத்தம் வருவது போன்றவை இந்தக் காய்ச்சலின் அறிகுறிகள்.

சிக்குன்குனியா காய்ச்சல் வருவதற்கும் 'ஏடிஸ் ஏஜிப்டி' வகை கொசுதான் காரணமாக இருக்கிறது. சிக்குன்குனியா



வந்தால், காய்ச்சல் மற்றும் உடலில் உள்ள மூட்டு இணைப்புகளில் கடுமையான வலி போன்றவை ஏற்படும். எலியின் சிறுநீர் வழியாக எலிக்காய்ச்சல் பரவுகிறது. இந்தக் கிருமித்தொற்று உள்ள சிறுநீர், மழை நீரில் கலக்கும்போது, அது மனிதர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும். இதனால், வெளியே சென்று வீடு திரும்பியதும், வெதுவெதுப்பான நீரில் கால்களை நன்கு கழுவ வேண்டும். வீட்டைச் சுற்றி நடப்பதாக இருந்தாலும், காலணி அணியாமல் செல்லக் கூடாது.

'மெட்ராஸ் ஐ'

'மெட்ராஸ் ஐ' என அழைக்கப்படும் கண்நோய் மழைக் காலங்களில் அதிகமாகப் பரவும். கண்ணுக்குள் இருக்கும் 'கஞ்சக்டைவா' எனும் பகுதியை 'அடினோ' வைரஸ் தாக்குவதால் கண் சிவந்துவிடும். இதனால், சில நேரங்களில் கண்ணீர் கசிந்துகொண்டே இருக்கும். 'அடினோ வைரஸ்' எளிதில் மற்றவர்களுக்கும் பரவும்.

வயிற்றுப்போக்கு

மழைக்காலத்தில் தண்ணீரில் கழிவுநீர் கலக்க வாய்ப்பு அதிகம். இதனால், கொலரா போன்ற வயிற்றுப் போக்கைப் பரப்பும் கிருமிகள் இந்தப் பருவத்தில் வேகமாகப் பரவும். சுகாதாரம் அற்ற முறையில் தயாரித்து விற்கப்படும் உணவுப் பொருட்களை உண்பதன் மூலமும், ஈ மொய்த்த பொருட்களைச் சாப்பிடுவதன் மூலமும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம். பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகளுக்கு இந்தப் பாதிப்பு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். தெருவோர உணவுகள் மட்டும் இன்றி வீட்டிலும் சுத்தமான உணவு, காய்ச்சி வடிகட்டிய சுத்தமான நீரைப் பருகவில்லை எனில், டைபாய்டு காய்ச்சல் வரலாம்.

மழைக்காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்

மழைக்காலத்தில் முடிந்தவரை வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

தினமும் இரண்டுமுறை வெது வெதுப்பான நீரில் குளிக்க வேண்டும். அதிக கூடும் ஆபத்து.

நன்கு தேய்த்துக் குளிக்கும்போது, நம் உடல் சருமத்தில் இருக்கும் இறந்த செல்கள் நீங்கும்.

'சைனஸ்', ஆஸ்துமா முதலான தொந்தரவுகள் உள்ளவர்கள், மருத்துவர் அறிவுரையின் பேரில் தாராளமாகத் தலைக்குக் குளிக்கலாம். தலைக்குக் குளித்ததும் உடனடியாக நன்றாகக் காயவைப்பது அவசியம்.

காய்ச்சல், சளி, இருமல், நுரையீரல் தொந்தரவுகள்

(22 ஆம் பக்கம் பார்க்க)

கண்பார்வைக் குறைபாட்டை குணப்படுத்தும் பேரீச்சம்பழம்

இயற்கை அன்னையின் கொடை பேரீச்சம்பழம். பேரீச்சம்பழத்தில் 'இரும்புச் சத்து', 'கால்சியம்', 'விட்டமின் ஏ, வி, பி2, பி5 , இ' போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன. கண்பார்வைக் குறைபாட்டை குணப்படுத்த சிறந்த மருந்து பேரீச்சம்பழமே ஆகும். இதில் விட்டமின் 'ஏ' அதிகமாக உள்ளது . மாலைகண் நோயால் பாதிக்கப் பட்டவர்கள், தேனுடன் பேரீச்சம்பழத்தை கலந்து ஊற வைத்து சாப்பிட்டு வர உடலுக்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும் கிடைக்கும். எனவே கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

எந்தக் காரணமும் இன்றி உடல் இளைத்திருந்தாலும், அவர்கள் பேரீச்சம் பழத்தைத் தாராளமாகச் சாப்பிடலாம். பேரீச்சம்பழத்தை முறையாக உணவோடு சேர்த்துக் கொள்வதால், மெலிந்த உடல் தேறும். களைப்பு நீங்கும். தாது விருத்தியும் பலமும் உண்டாகும்.பேரீச்சம் பழத்தை விதை நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கி காய்ச்சிய பசும்பாலில் சேர்த்துக் கலந்து, தேன் , ஏலக்காய் , குங்குமப்பூ கலந்து பருகலாம். இதற்கு இணையான ஒரு டொனிக் கிடையாது. சிறுவர்களுக்கு மிகவும் சத்துள்ள ரொனிக் ஆகும்.

தினமும் இரவில் படுக்கச் செல்லும் முன்னர் ஒரு குவளை காய்ச்சிய பசும் பால் மற்றும் இரண்டு பேரீச்சம்பழத்தினையும் உண்டு வந்தால் உடல் நல்ல பலம் பெறும். புதிய இரத்தம் உண்டாகும். தோல்பகுதிகள் வழுவழுப்பாகவும் , மிருதுவாகவும் இருக்கும்.

உடல் நலம் பாதுக்காக்கும் செவ்வாழை பழம்

வாழைப்பழத்தில் பல வகை உண்டு. இதில் செவ்வாழை பழம் எளிமையும், எண்ணற்ற சத்துக்களும் கொண்ட வாழைப்பழமாகும். சிலவற்றில் உயிர்ச்சத்தும், சிலவற்றில் சுண்ணாம்புசத்தும், இரும்புச் சத்தும் கொண்டுள்ளன. பலரும் அரிய அளவிலேயே உட்கொள்ளும் இந்த வாழைப்பழத்தில் பல மருத்துவ குணாங்கள் உண்டு.

இதில் உள்ள பீட்டா கரோட்டீன் கண்நோய்களை குணமாக்கும். செவ்வாழையில் உயர்தர பொட்டாசியம் உள்ளது. இது சிறுநீரகத்தில் கல் ஏற்படுவதை தடுக்கிறது. இதில் 'வைட்டமின் சி ' அதிகம் உள்ளது. 50 சதவீதமான நார்ச்சத்தும் காணப்படுகிறது.செவ்வாழையில் ஆண்டி ஆக்ஸிடென்ட் காணப்படுகிறது.

மாலைக்கண் நோயால் பாதிக்கப் பட்டவர்கள் இரவு சாப்பிட்ட பின் தொடர்ந்து 40 நாள்கள் செவ்வாழைப் பழம் சாப்பிட்டு வந்தால் மாலைக் கண் நோய் குணமாகும். பல்வலி, பல்லசைவு போன்ற பல்வகையான பல்வியாதிகளையும் செவ்வாழைப்பழம் குணமாக்கும்.பல் தொடர்புடைய நோய்கள் ஏற்பட்டால் தொடர்ந்து 21 நாள்கள் செவ்வாழை சாப்பிட்டு பல் நோய் மாறிவிடும்.

சொறி, சிரங்கு, தோலில் வெடிப்பு போன்ற சரும வியாதிகளுக்கு செவ்வாழை சிறந்த நிவாரணம் தரும். சிரங்குக்கு மருந்து போடாவிட்டாலும் செவ்வாழை

பழத்தை தொடர்ந்து 7 நாள்கள் சாப்பிட்டு வர சரும நோய் குணமாகும். நரம்புதளர்ச்சி ஏற்பட் டால் உடலில் பலம் குறையும். ஆண்மைக் குறைபாடு ஏற்படும். எனவே நரம்பு தளர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள் தினசரி இரவு செவ்வாழைப்பழம் சாப்பிட வேண்டும். தொடர்ந்து 48 நாள்கள் செவ்வாழை சாப்பிட்டால் நரம்புகள் பலம் பெறும். ஆண்மைத் தன்மை சீரடையும்.

தொற்றுநோய்க் கிருமிகளை கொல்லும் அரிய சக்தி செவ்வாழைப் பழத்துக்கு உண்டு. வாரம் ஒருமுறை செவ்வாழை சாப்பிட்டு வந்தால் உடலில் தொற்று நோய் பாதிப்பு கட்டுப்படும். தினமும் ஒரு செவ்வாழை சாப்பிடுபவர்களுக்கு அஜீரணக் கோளாறு ஏற்படாது. மலச்சிக்கல் இருப்பவர்கள் மூலநோய் குறைபாடு உள்ளவர்கள் தினமும் ஒரு வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் அந்த குறைபாடுகளில் இருந்து விடுபடலாம்.

மேலும் தினமும் இரவு உணவுக்குப் பிறகு ஒரு பழம் வீதம் சாப்பிட்டு வந்தால் நல்ல ஜீரணசக்தி உண்டாகும். மேலும் செவ்வாழை பழம் கல்லீரல் வீக்கம், சிறுநீர் கோளாறை சீராக்கும் சக்தி கொண்டது. எந்த வயதினராக இருந்தாலும் கண் பார்வை குறைய ஆரம்பித்தவுடன் அவர்களுக்கு தினசரி உணவில் செவ்வாழைப்பழம் வேளைக்கு ஒன்று வீதம் 21 நாள்களுக்கு கொடுத்து வந்தால் கண் பார்வை கொஞ்சமாக தெளிவடையும்.

கவிதைப்புனல்

நேசம்

நீ உனக்காக அழுகிறாய்
என்றால் யாரையோ
நேசிக்கிறாய்
என்று அர்த்தம்...!
நீ மற்றவர்களுக்காக அழுகிறாய்
என்றால் யாரோ
உன்னை நேசிக்கிறார்கள்
என்று அர்த்தம்

நேசம்

தனிமை

இமை மூடி
இதழ் சேர்த்து
கன்னம் உரசி
கைகள் கோர்த்து
காதல் செய்தோம்
நாம் அன்று

இதயம் மூடி
இரவுகள் சேர்த்து
கவலைகள் உரசி
கண்ணீர் கோர்த்து
தனிமை நெய்கின்றேன்
நான் இன்று

அனீஷெ ஜெ

வஞ்சமில்லாதவன் கவிஞன்

வார்த்தையில் பஞ்சமில்லாதவன்
கவிஞன்..
சொல்லாலே கரம் நீட்டும்
அவன் நெஞ்சம்
அவன் சொல்லாலே கரையும் கல்
நெஞ்சம்
கவி அவனுக்குள் தஞ்சம்...
அவன் விலை இல்லா பசுந்தங்கம்..
கொடுத்தாலும் குறையாத ஊற்று..
அது கரைத்தாலும் கரையாத கல்வெட்டு..
அவன் வெள்ளை மனதிலே கவி ஊற்று..
அது வெள்ளை பாலோடு தேன் ஊற்று..
சொல்லாலே அவன் கொடை வள்ளல்..
சொல் ஊரிலே அவன் கவி மன்னன்..
நட்புக்கு அவன் கவி மனு கொடுக்கும்..
கவி மனம் கடல் தாண்டியும்
தடம் பதிக்கும்

எழுத்து

அவளின்றி உணர்வேது

என்னுள்ளம் அவள் மீது
இரங்கற்பா சூடியது
கன்னியவள் கண்டவுடன்
அணைத்து மகிழ்ந்த நாள்

மனமது அவளிடம்
நாட்டம் கொண்டது
மனதோடு அவளும்
சேர்ந்து கொண்டாள்

நிலவு கூட
நின்று சிரிக்கும்
கனவு கூட
கவிதை எழுதும்

இயல்பு அதிகம்
அவளிடம் புன்னகை
இதய திருப்பம்
அவளோட பார்வை

கொடிகள் கூட
காற்றில் அசைந்திட
கோலமிட்ட
மாங்கை நோக்கினாள்

கவிதை எழுதும்
எந்த மைந்தனும்
அவளை நினைத்து
பிரம்மாவாவான்

நிமிட முள்கள்
நெஞ்சைத் தீண்டுகிறது
நியத்தின் உணர்வுகள்
பேரலையாகிறது

அவளை அழைக்க
மனது ஏங்கிறது
துயில் கனவிலும்
அவளின்றி உணர்வேது

வே. வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்

வரலாற்றைப் புரட்டும் ருத்ரமாதேவி

13ஆம் நூற்றாண்டில் 40 ஆண்டுகளுக்கு மேலாக காகத்திய பேரரசை ஆட்சி செய்த வீர தீர அரசிதான் ருத்ரமாதேவி! அவரது வீரதீர சாகஸ வாழ்க்கையைத் தாண்டி ஒரு வலிமிகுந்த வாழ்க்கையை சொல்லியிருக்கும் ருத்ரமாதேவி படக்கதைப்படி., காகத்திய சாம்ராஜ்யத்தை ஆளும் அரசன் கணபதி தேவுடு எனும் கிருஷ்ணமராஜ ம. அவரது ராஜ்ஜியத்தை ஆள வாரிசு இல்லை!

இந்த நேரத்தில் தான் மகாராணி ஒரு பெண் குழந்தையை பெற்றெடுக்கிறாள். ஆண் வாரிசு இல்லை என தெரிந்தால், எதிரி சாம்ராஜ்யமான தேவகிரியின் அரசன் நாட்டை தாக்க கூடும் என்று நினைத்து, ருத்ரமாதேவியை பட்டத்து இளவரசனாக மாற்றி ருத்ர தேவடுவாக அறிவிக்கிறார்.

ருத்ரமா தேவியும் தன் அடையாளங்களை மறைத்து போர்க்கலைகளில் தேர்ச்சிபெறுக்கிறார். பின் ஒரு நாள் பட்டத்து இளவரசன் நிஜமான பெண் என்ற உண்மை காக்கிய சாம்ராஜ்யத்திற்கு தெரியவருகிறது. பின் ருத்ரமாதேவி என்ன செய்தார்..? தன்னை மகாராணியாக அறிவித்து ஆட்சி செய்தாரா..? எதிரி மன்னன் படை எடுத்து வந்தானா..? அல்லு அர்ஜுன் மற்றும் ராணாவிற்கு படத்தில் என்ன வேலை என்பன போன்ற கேள்விகளுக்கு தொய்வான இரண்டாம் பாதி விடையாக அமைந்துள்ளது.

படத்தில் அனுஷ்கா ருத்ரமாதேவி ராணியாக பிரமாதப் படுத்தியிருக்கிறார். பாடல்களில் அழகாகவும் சண்டைக் காட்சிகளில் ஆக்ரோஷமாகவும் இருவேறு பரிமாணங்களை காட்டியிருக்கிறார். சண்டைக் காட்சிகளில் அனுஷ்காவின் சாகசம் அரங்கத்தில் கைத்தட்டல்களை அள்ளுகிறது. மெனக்கெட்டு இருக்கிறார்கள். அல்லு அர்ஜுனின் கதாபாத்திரத்தை நன்றாக வடிவமைத்திருக்கிறார் குணசேகர்.

அல்லு அர்ஜுனின் நடிப்பு ஆளுமையும் படத்திற்கு பலம் சேர்க்கிறது. அதுவும் அவரது அறிமுக காட்சி அருமை. இறுக்கமான முகத்துடன் அல்லு அர்ஜுன் செய்யும் நகைச்சுவையும் ரசிகர்களை சிரிக்க வைக்கிறது. ராணா, பிரகாஷ்ராஜ், கிருஷ்ணமராஜு என அனைவரும் பாத்திரம் அறிந்து பலிச்சிடுகிறார்கள். பலவீனம் என்ன என்றால், இரண்டாம் பாதி திரைக்கதை தான்.

முதல் பாதியில் அடுக்கடுக்கான காட்சிகள் விரைவாக கதை சொல்கிறது. ஒரு ராணி உருவாகுகிற காட்சிகள் அதற்கான நியாயத்துடன் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. இடைவேளையை எதிர்பார்ப்புடன் வைத்துவிட்டு அதன் பின்னான காட்சிகள் படத்தின் வேகத்தை தடாலடியாக குறைத்துவிடுவது படத்தின் தவிர்த்திருக்கலாம். நித்யா மேனன் மற்றும் கேத்தரின் தெரஸாவிற்கு குறிப்பிட்டு சொல்லும்படி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. VFX காட்சிகளும் அதனுடன் பொருந்துகிற வகையில்

படத்தில் ஒரு வேலையும் செய்யவில்லை.

ஆடை அணிகலன்கள் தேர்வு, வின்சன்டின் ஒளிப்பதிவு கண்களுக்கு விருந்தாக அமைகின்றது.

படத்தில் தேவையில்லாத காட்சிகளை கத்தரித்திருந்தால் திரைக்கதை வேகமெடுத்திருக்கும். இளையராஜா பாடல்களில் கமாராக வாசித்து, பின்னணியில் உயிர்ஊட்டியிருக்கிறார். படத்தில் குறிப்பிட்டு சொல்ல வேண்டிய மற்றொரு விஷயம் வசனங்கள். அதிலும் அல்லு அர்ஜுன் பேசும் வனங்கள் நினைவில் நிற்கின்றன. இயக்குனர் குணசேகரின் கனவு படமாக இருந்தாலும் முதல் பாதியில் காட்டிய அக்கறையை இரண்டாம் பாதியிலும் காட்டியிருக்கலாம்.

அப்படி செய்திருந்தால் இன்னும் படம் மிரட்டலாக வந்திருக்கும். படத்தில் ஏகப்பட்ட நட்சத்திர நடிகர்கள், அவர்களின் கதாபாத்திர வடிவமைப்புகள் என குணசேகர் கடினமாக உழைத்திருக்கிறார். ஒரு வரலாற்று திரைப்படம் எடுப்பது ஒன்றும் சுலபமான வேலையல்லவே.

படத்தின் காட்சிகளுக்கு நிறையவே செலவு செய்திருக்கிறார்கள். VFX க்கு மிகப்பெரும் பலவீனமாக அமைகிறது. குறிப்பாக இரண்டாம் பாதி பாடல்களை போர்க் கால கருவிகள், அரண்மனை அரங்குகள் என அனைத்தும் மிக நேர்த்தியாக இருக்கிறது. என்னதான் VFX நன்றாக இருந்தாலும் போர்க்கள காட்சிகளில் அதன் நேர்த்தி குறைவு. ஒளிப்பதிவாளர் அஜயன் வின்சன்டின் ஒளிப்பதிவு கண்களுக்கு விருந்தாக அமைகின்றது.

தலைசீவும் போது கவனிக்க வேண்டியவை

தலை முழுகும் போது கூந்தலைச் சீவ வேண்டாம். ஏனெனில் கூந்தலானது ஈரமாக இருக்கும் போது சீவினால் முடியில் முடிச்சுகள் மற்றும் சிக்குகள் அதிகமாக இருக்கும். இந்த நிலையில் சீப்பை கொண்டு சீவினால் முடியானது கொத்தாக வேரோடு தான் வரும்.

கூந்தலை சீவும் போது மண்டை ஓட்டில் நன்கு பதியும்படி நன்கு சீவ வேண்டும். கூந்தலும், தலைச்சருமமும் ஒன்றல்ல. ஆகவே கூந்தலைச் சீவும் போது தலைச்சருமத்தில் நன்கு படும்படி சீவினால் தலைச்சருமத்தில் இரத்த ஓட்டம் அதிகரித்து மயிர்க்கால் நன்கு வளரும். இவ்வாறு தினமும் செய்தால் கூந்தலானது நன்கு ஆரோக்கியமாக வளரும்.



கூந்தலை முதலில் சீவ ஆரம்பிக்கும் போது கூந்தலின் முனையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். ஏனென்றால் கூந்தலில் முடிச்சுகளானது முனையிலேயே அதிகமாக இருக்கும். ஆகவே அப்போது முதலில் இந்த முடிச்சுகளை அகற்றிப் பின் ஆரம்பித்தால் கூந்தல் உதிராமல் இருக்கும். இல்லையென்றால் கூந்தல் வேரோடு வந்து விடும்.

மேலும் கூந்தலை இறுக்கமாகக் கட்டக்கூடாது. நிறையப்பேர் இந்த மாதிரியே கூந்தலை கட்டுகின்றனர். கூந்தலை போனி டைல் போடக்கூடாது. அப்படி போட்டால் முடியானது இடையில் கட் ஆகி உதிரும்.

மண்ணில் சிலை செய்த ஞாபகம்
கல்லில் கலை எழுதிய ஞாபகம்
காற்றில் பட்டம் விட்ட ஞபாகம்
தண்ணீரில் தத்தளித்த ஞாபகம்
காகிதத்தில் உன்முகம் வரைய,
என் முகத்தில் காயம் பட்ட ஞாபகம்
சுவரில் கிறுக்கிய கவிதை ஞாபகம்
நீ என் மனதில் வந்த ஞாபகம்
நீ என் காதலியான ஞாபகம்
இவற்றில்,
நீ அழிந்தால் அல்ல
இந்த உலகம் அழிந்தால் கூட
அழியாத ஞாபகம்
நீ என் காதலியான ஞாபகம்..!

மகேந்திராஜ்

பெண் என்பவள்..

ஒருவர் எதற் கெடுத்தாலும் மனைவியுடன் சண் டை போடுவார். "ஒருநாள் அலுவலகம் போய் வேலை செய்து பார்.. சம்பாதிப்பது எவ்வளவு கஷ்டம் என்று புரியும்" என்று அடிக்கடி வாதாடுவார்.

அவள் ஒருநாள் பொறுமை இழந்து. "ஒருநாள் நீங்கள் வீட்டில் இருந்து பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள் . காலையில் குளிப்பாட்டிசாப்பிடவைத்து, வீட்டுப் பாடங்கள் சொல்லிக் கொடுத்து ,சீருடை அணிவித்து பாடசாலைக்கு அனுப்புங்கள். அத்தோடு சமைப்பது , துவைப்பது எல்லாவற்றையும் செய்து தான்பாருங்கள்" என அவளும் பதிலுக்கு வாதாடினாள்.

கணவனும் அதை ஏற்றுக் கொண்டான்.அவன் வீட்டில் இருக்க.. அவள் அலுவலகம் போனாள். ஒரே குப்பை, கூளமாக இருந்தது அலுவலகம். முதலாளி மனைவி என்பதை மனதில் கொள்ளாமல் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்தாள்.வருகைப் பதிவேட்டை சரிபார்த்து தாமதமாக வருபவர்களைக் கண்டித்தாள்.கணக்கு வழக்குகளைப் பார்த்தாள். மாலை 5 மணி ஆனதும் வீட்டுக்குப் புறப்பட நினைத்தபோது, ஓர் அலுவலரின் மகள் திருமண வரவேற்பு குறித்து உதவியாளர் சொல்ல, பரிசுப் பொருள் வாங்கிக்கொண்டு கல்யாண மண்டபத்துக்குச் சென்றாள்.

கணவர் வராததற்கு பொய்யான காரணம் ஒன்றைச் சொல்லிவிட்டு, மணமக்களின் கட்டாயத்தால் சாப்பிடச் சென்றாள்.

சாப்பிட உட்கார்ந்தவளுக்கு சிந்தனையெல்லாம் வீட்டைப் பற்றியே! இலையில் வைத்த பூந்தியை மூத்தவனுக்குப் பிடிக்கும் என்று கைப்பையில் எடுத்து வைத்தாள்.

முறுக்கு கணவனுக்குப் பிடிக்குமே என்று அதையும் கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள். அவள் சாப்பிட்டதை விட, பிள்ளைகளுக்கும் கணவனுக்கும் எனப் பைக்குள் பதுக்கியதே அதிகம்.ஒரு வழியாக வீடு வந்து இறங்கியவள்,கணவன் கையில் பிரம்போடு கோபத்துடன் அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தாள்.

இவளை பார்த்ததும், "பிள்ளையா பெத்து வச்சிருக்கிறாய்? எல்லாம் 'கியா முய' என்று கத்துதுகள். அத்தனையும் குரங்குகள்.!

சொல்லுவதைக் கேட்க மாட்டோம் என்கிறார்கள். படி என்றால் படிக்க மாட்டோம் என்கிறார்கள். சாப்பிடு என்றால் சாப்பிட மாட்டோம் என்கிறார்கள். அத்தனை பேரையும் அடிச்சு அந்த அறையில படுக்க வைச்சிருக்கிறேன். பாசம் காட்டுறேன் என்று பிள்ளைகள கெடுத்து வைச்சிருக்கிறாய்" என்று கத்த...அவளோ, ஐயையோ பிள்ளைகளை அடிச்சீங்களா... என்றவாறு உள்ளே ஓடிப் போய் கதவைத் திறந்து பார்த்தாள். உள்ளே ஒரே அழுகையும் பொருமலுமாகப் பிள்ளைகள்.!

விளக்கைப் போட்டவள் அதிர்ச்சியுடன், இவனை ஏன் அடிச்சுப் படுக்க வைச்சீங்கள்? இவன் எதிர்வீட்டுப் பையனாச்சே என்று அலற.. ஓஹோ, அதுதான் ஓடப் பார்த்தானா..! என கணவன் திகைக்க...

அந்த நிலையில் இருவருக்கும் ஒன்று புரிந்தது.. இல்லாள் என்றும், மனைக்கு உரியவள் மனைவி என்றும் சங்க காலம் தொடங்கி நம் மூதாதையர்கள் சொல்வது சும்மா இல்லை.

இல்லத்தைப் பராமரிப்பதிலும் பிள்ளைகளுக்கு வளமான வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதிலும் ஒரு பெண்ணின் பங்கு தலையாயது.அதுபோல, பொருளீட்டி வரக்கூடிய ஆண்களின் பங்கும் அளப்பரியது. ஆனால் இருவரும் வேலைக்குச் செல்லும் இந்தக் காலத்தில் இது ஆணுக்கு, இது பெண்ணுக்கு என்று குடும்பப் பொறுப்புகளை இனம்பிரிக்க இயலாதபடி வாழ்க்கை சமத்துவம் ஆகிவிட்டது தற்போது.

இந்தச் சூழ்நிலையில் ஒரு குடும்பம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால் கணவன்மீது மனைவியோ, மனைவிமீது கணவனோ ஆதிக்கம் செலுத்தாமல் அன்பால் சாதிக்கும் மனநிலையை கொண்டிருந்தால் தான் எல்லா வளமும் பெற்று பல்லாண்டு வாழ முடியும்...

உனக்கே உனக்கான நேரம்

பெற்றோருக்கு
சகோதரனுக்கு
கணவனுக்கு
மகனுக்கு
சொந்தங்களுக்கு
நேரம் ஒதுக்கிய தோழியே
உனக்கே உனக்கான நேரம்
எப்போது?

தோழி

காதல் கல்யாணம் சந்தோஷமாக அமைய வேண்டுமா?

இன்று காதலிக்காதவர்களே கிடையாது. ஆணும், பெண்ணும் கண்களால் மோதிக்கொண்டாலே அங்கே யாராவது ஒருவரிடத்தில் காதல் தீ பற்றிக்கொண்டு விடுகிறது. இன்னொரு மறுக்க முடியாத உண்மை; டைம் பாஸாக வேண்டும் என்பதற்காகவும் சிலர் காதலிக்கிறார்கள். இருவருக்கும் திருமணம் ஆகும்வரை பேசுவோம், பழகுவோம், ஊர் சுற்றுவோம்.

திருமணம் ஆகிவிட்டால் நீ யாரோ, நான் யாரோ என்று போய்விடுவோம் என்று தங்களுக்குள் அக்ரிமென்டே போட்டுக்கொள்கிறார்கள். சென்னை போன்ற மெட்ரோ சிட்டிகளின் லேட்டஸ்ட் கலாச்சாரம் இந்த வகை காதல்(?!). உங்கள் காதலன் உண்மையான காதலனாக இருந்தால், அவளிடம் எப்படி பழகலாம்?

அவள் உங்களின் வருங்கால கணவன் என்பது உறுதியாக தெரிந்தால் மாத்தி ரமே காதலியுங்கள். இல்லையென்றால், பழகியவை எல்லாம் கனவென்று நினைத்து ஒதுங்கிவிடுங்கள். இதில் தப்பே இல்லை. காதலிக்கிறேன் என்று சொல்லிவிட்டு, கடைசியில் கழற்றிவிட்டு ஒரு பெண்ணின் சாபத்தை சம்பாதித்துக் கொள்ளாதீர்கள்.

உங்கள் காதல் சைவக் காதலாக இருக்கட்டும். தவறான எண்ணத்தில் கை வைத்து விடாதீர்கள். நாளை, நீங்கள் கணவன்-மனைவி ஆகும்போது, ச்ச்ச்சீசீ! அப்படியா நடந்து கொண்டோம்? என்று அருவெறுப்பாக யோசிக்க வேண்டியது இருக்கும்.

காதலனிடம் மனம் விட்டு பேசுங்கள். எதிர்காலம் பற்றி திட்டமிடுங்கள். முறையாக, இருவர் வீட்டிலும் காதலுக்கு ஒப்புதல் வாங்கிக்கொள்ளுங்கள். காலாகாலத்தில் திருமணம் செய்துகொள்ளுங்கள்.

மொத்தத்தில் உங்களுக்காக அவள் என்றும், அவருக்காகவே நீங்கள் என்றும் எப்போதும் நினைத்திருங்கள். பிறந்த சொந்தங்களை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு நம்மோடு, நமக்காக வருபவரை புரிந்து கொண்டு அவருக்காக விட்டுகொடுத்து வாழுங்கள் உங்களுக்காக இருக்கும் அவரிடம் எப்படி பழகுகிறோம் என்பது முக்கியமல்ல. எல்லா விஷயங்களிலும் எந்த அளவுக்கு அவரை புரிந்து கொண்டு விட்டு கொடுத்து சந்தோஷமாக வாழ்க்கையை நடத்துறீங்க என்பதுதான் முக்கியம்.

அதை புரிந்துகொண்டு நீங்கள் செயல்பட்டால் அவர் உங்களுக்கு நல்ல கணவர்தான்.

நீங்களும் அவருக்கு நல்ல மனைவி தான்....!

மூச்சிழந்த...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிமிடங்களுக்குள் அந்தச் சுருளைக் கடக்க வேண்டும். இல்லாவிட்டால் இழப்புத் தான். முதலில் ஆண்கள் படையணி ஒன்று வெற்றிகரமாக ஊடுருவியது. அடுத்தது மகளிர் படையணி. ஆனால் அவர்கள் திட்டமிட்ட நேரத்துக்குள் அந்த முட்கம்பிச் சுருளைக் கடக்க முடியவில்லை. காரணம் போராளிகளின் பின்னல் முட்கம்பிகளில் சிக்கிக் கொண்டு விட்டன. முன்னேறவும் முடியாமல் பின் வாங்கவும் முடியாமல் சிக்கிய பெண் போராளிகளை இராணுவம் இலகுவாகச் சுட்டுக் கொல்ல முடிந்தது. அந்தத் திட்டமும் தோல்வியாகிப் போனது. அதற்குப் பின்னர் அரசியல்துறைப் போராளிகள் மட்டுமே இரட்டைபின்னலிடலாம் என்ற விதி கொண்டுவரப்பட்டது.

இப்படி தலைமுடியைக் குட்டையாக வெட்ட வேண்டிய அவசியம் இருக்கவில்லை என்பதால் சாதாரண பெண் போல தமிழினியக்காவால் உருமாற முடிந்த போதும், அவர் பொதுமக்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு, படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இத்தனை நாளும் மகோன்னத நிலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய தமிழினியக்காவை பாதுகாக்காமல் பொதுமக்கள் ஏன் காட்டிக் கொடுத்தார்கள்?

உண்மையில் தமிழினியக்கா முள்ளிவாய்க்காலில் இருந்து மீண்டு வந்ததைப் பலரும் சந்தேகக் கண்ணோடுதான் பார்த்தார்கள். சாதாரண போராளிகள் கூட இறுதிவரை போராடி உயிரை மாய்த்தபோது, கழுத்தில் கட்டியிருந்த சயனைட் குப்பியைக் கூட கழற்றிவிட்டு தமிழினி தன் உயிரைப் பாதுக்காக்க படைக் கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்தது சரியா என்ற கேள்வி மக்களிடம் எழுந்தது. அத்தோடு இன்னொரு கோபமும் தமிழினியிடம் மக்களுக்கு இருந்தது.

புலிகளுக்கான ஆட்சேர்ப்புப் பிரசாரக் கூட்டங்களில் தமிழினியக்காவின் உணர்ச்சிமிகு உரையால் போராடப் போன யுவதிகள் ஏராளம். இதுமட்டுமல்லாது இறுதிக்கட்டத்தில் கட்டாய ஆட்சேர்ப்பிலும் தமிழினியக்காவும் அவரது படையணியும் மும்முரமாக ஈடுபட்டிருந்தன. அப்படி தாமாகவும், கட்டாயமாகவும் புலிகளின் படையணியில் சேர்க்கப்பட்ட தங்கள் பிள்ளைகளின் உயிரைப் பலி கொடுத்து விட்டு, அவர்கள் போராடப் போவதற்கு காரணமான தமிழினியக்கா உயிரைக் கையில் பிடித்தபடி , சாதாரண வாழ்வுக்குள் நுழைவதை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

படையினரால் பிடிக்கப்பட்ட தமிழினியக்கா கடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டார். அங்கு மண்பெண் அலங்காரப் பயிற்சி அவருக்கு வழங்கப்பட்டது. அதன் பின்னர் மஹிந்த அரசு தன்னுடைய நல்லபிள்ளைத் தனத்தைப் பிரசாரப்படுத்த தமிழினியக்காவைப் பயன்படுத்தியது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட பெண் போராளி ஒருவருக்கும் படை வீரர் ஒருவருக்குமான திருமண நிகழ்வில் மணப்பெண்ணின் தோழியாக தமிழினியக்காவைப் புகைப்படங்களில் காட்டி தமிழ் மக்களின் ஆத்திரத்தை அரசு அதிகப்படுத்தியது. இப்படி எரிந்து கொண்டிருந்த தமிழினி எதிர்ப்பு என்கிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல இன்னும் ஒரு அறிவிப்பையும் அரசு வெளியிட்டது. 'மாகாணசபைத் தேர்தலில் தமிழினி அரச சார்பு வேட்பாளராக களமிறங்குவார்' என்பதே அந்த அறிவிப்பு.

எங்கட பிள்ளையளைப் பலி குடுத்துப் போட்டு அவா எலக்சன் கேக்கப் போறாவோ? என்று தமிழ் மக்கள் கொதிக்கத் தொடங்கினர். நல்லவேளையாக அவர் தேர்தலில் களமிறங்காமல் தவிர்த்துக் கொண்டார். அதன் பின்னர் புனர்வாழ்வு முடிந்து விடுவிக்கப்பட்ட பின்னர் ஏறக்குறைய தமிழ் மக்களின் உதடுகளில் இருந்தும், மனங்களில் இருந்தும் தமிழினி காணாமல் போனார்.

ஒதுங்கி இருந்த காலம்

புனர்வாழ்வின் பின்னர் தமிழினியக்கா தனக்குத் தானே சிறையிட்டுக் கொண்டார். எவருடனும் கதைப்பதில்லை. சிரிப்பதில்லை. வெளியுலகத் தொடர்புகளைத் துண்டித்துவிட்டு, ஜெயக்குமாரன் என்பவரை திருமணம் செய்து கொண்டு, யாருமே காணாத வெளிகளில் பயணிக்கத் தொடங்கினார். இந்த ஒதுங்கலின் காலத்தில் அவருக்குள் இருந்த இன்னொரு தமிழினி வெளிப்பட்டாள். தனிமையையும், கடந்த கால நினைப்புகளையும் மறக்க தமிழினி புத்தகங்களுக்குள் இன்னொரு உலகைக் காண முற்பட்டார். அது அவருக்குள் உறங்கிக் கொண்டிருந்த படைப்பாளியைத் தூக்கம் கலையச் செய்தது. சிறுகதைகளையும், கவிதைகளையும் படைக்கத் தொடங்கினார்.

முகப்புத்தகத்தின் மூலம் ஒரு சிலருடன் உரையாடவும் செய்தார். இதன்போதெல்லாம் கடந்தகாலம் தொடர்பான விடயங்களைத் தப்பித் தவறிக்கூடப் பேசவில்லை. இவ்வளவு ஏன். தனக்குப் புற்றுநோய் ஏற்பட்டு, குணமாக்க முடியாத நிலை வந்ததைக் கூட பகிரமால் மறைத்தார். ஆரம்பத்தில் உடலில் உபாதைகள் ஏற்பட அதனை அவர் 'அல்சர்' என்றே நினைத்திருந்தார். மருத்துவர்களும் முதலில் அவ்வாறுதான் சொல்லியிருந்தார்கள். எனினும் பல பரிசோதனைகளின் பின்னர் தமிழினியக்காவுக்கு புற்றுநோய் தான் ஏற்பட்டுள்ளது என்பதை மருத்துவர்கள் கண்டுபிடிப்பதற்கிடையில் காலம் கடந்துவிட்டது. கடைசி வரை புலிகள் அமைப்பில் இருந்த போது அவர் கைவிடாத இரட்டைப்பின்னலையும், சிரிப்பையும் உதறிவிட்டு, மழிக்கப்பட்ட தலையோடு 2015 ஒக்ரோபர் 18 இல் காலத்தை விட்டே தமிழினியக்கா காணாமல் போயிருந்தார். *

சேயாவுக்கு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜெட் வேகத்தில் நடந்து , குற்றவாளி இவர் தான் என்று ஒருவரை ஆதார பூர்வமாக- மரபணுச் சோதனை மூலம்- பொலிஸார் அடையாளம் காட்டியும் விட்டனர். சேயா என்ற 5 வயதுச் சிறுமி வன் புணரப்பட்டு, கொலை செய்யப் பட்டு ஒரு மாதம் நிறைவடை வதற்குள் குற்றவாளி ஆதாரபூர் வமாக நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு, தீர்ப்பெழுதும் வேலை மட்டுமே மிச்சமாகி இருக்கிறது. இப்படி மின்னல் வேகத்தில் வழக்கு முடிவுக் கட் டத்தை எட்டியதற்கு காரணம் பொலிஸார் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் , மரபணுப்பரிசோதனைகளை துரிதகதியில் மேற்கொண்டு ஆதாரங்களைத் திரட்டியது தான். அதுவும் சேயா கொலை வழக்கில் சேயாவின் தந்தை, பக்கத்து வீட்டு மாணவன், கொண்டயா, கொண்டாயவின் சகோதரன் எனப் பலர் சந்தேகப் பட்டியலுக்குள் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரினதும் விந்து மரபணுக்கள் தனித்தனி யாக பரிசோதிக்கப்பட்டே கடைசியில் கொண்டயாவின் சகோதரனே கொலையாளி என்பதைப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

உண்மையில் சேயாவைக் கொன்றவனைக் கண்டுபிடிக்க பொலிஸார் காட்டிய வேகத் தையும், அந்த வழக்கை முடி வுக்கு கொண்டுவர பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மாறி மாறி மரபணுப்பரிசோதனை களைச் செய்து உண்மைக் குற்றவாளியை இனங்காட்டிய விவேகத்தையும் பாராட்டத் தான் வேண்டும். ஆனால் இதே வேகத்தையும், விவேகத்தையும், பரிசோதனைகளுக்காக பணத்தைச் செலவிடுவதில் தாராளத்தையும் தமிழ் மக்கள் தொடர்பான வழக்குகளில் ஏன் அரசு காட்டுவதில்லை? அப்படி வேகத்தையும், பரிசோதனை களுக்கு பணம் செலவிடுவதில் தாராளத்தையும் காட்டியி ருந்தால் மன்னார் புதைகுழி வழக்கும், வித்தியா வழக்கும் நிறைவுற்று உண்மைகள் வெளிக்கொணரப்பட்டு, குற்றவாளிகளுக்கு தண்டனை யும் விதிக்கப்பட்டிருக்கும். தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமனானது. இனியாவது நல்லாட்சி அரசு இதனைப் புரிந்து செயற்படுமா?

இவ்வார இராசி பலன்

21.10.2015 ~27.10.2015

மேஷம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

உடன் பிறந்தவர்கள் ஓரளவு உதவுவர். வாகன பராமரிப்பு செலவு குறையும். பயணங்கள் இனிதாகும். புத்திரர்களின் செயல் பெருமை அளிக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கருத்து இணக்கம் கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர்களுக்கு பணவரவு கூடும். பெண்கள், மகிழ்ச்சிகர வாழ்வு பெறுவர். மாணவர்கள் கருத்துடன் படிப்பர்.

ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்

போக்குவரத்தில் கவனம் நல்லது. புத்திரர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம் ஆகும் என்பதால், வருத்தம் கொள்வர். எதிர் மனப்பாங்கு உள்ளவர்களிடம் விலகி இருக்கவும். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். அதிக உழைப்பால் தொழில், வியாபாரம் சீரான அளவில் வளர்ச்சி பெறும். பணியாளர்கள் குளறுபடி வராமல் செயல்படுவது நல்லது. பெண்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

மிதுனம்

மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்

பசு, பால், பாக்ய யோகம் அமைந்து செல்வ வளம் பெருகும். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்களின் எதிர்கால வாழ்வு சிறக்க சில பணிகளை மேற்கொள்வீர்கள். நிலுவைப்பணம் வசூலாகும். மனைவி வழி உறவினர் மதிப்பு, மரியாதை தருவர். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி விலகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

கடகம்

புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

புத்திரர்களின் கேள்விகளுக்கு, உங்கள் அனுபவங்களை பதிலாகச் சொல்வீர்கள். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க, சில மாற்றங்களைச் செய்வீர்கள். பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறை பின்பற்ற வேண்டும். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும்.

சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடப்பர். உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு மனதிற்கு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் சுமாரான பணவரவு இருக்கும். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்ற கால தாமதமாகும். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது.

கன்னி

உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்

உடல்நலனில் பாதிப்பு வரலாம் என்பதால், அதிக கவனம் தேவை. மனைவியின் ஆலோசனை, குடும்ப எதிர்கால நலனுக்கு உதவும். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். பணியாளர்கள் பணியிடத்தின் சூழ்நிலை உணர்ந்து செயல்பட வேண்டும்.

துலாம்

சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.

வீட்டில் ஒற்றுமை மகிழ்ச்சி கூடும். முன்பு செய்த நற்செயலுக்குரிய பெருமை கிடைக்கும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பண வரவும் அதிகரிக்கும். கேதுவின் அமர்வு எதிரியின் மனதிலும் நல்ல மாற்றம் தரும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

விருச்சிகம்

விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

உடன் பிறந்தவர்களின் கருத்தை விமர்ச்சிக்க வேண்டாம். வாகன பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். புத்திரர்களின் சிந்தனையில் நல்ல மாற்றம் ஏற்படும். எதிர்ப்பாளர்கள் பலமிழந்து போவர். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுங்கள். தொழில், வியாபாரத்திற்காக கூடுதல் மூலதனம் தேவைப்படும். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்ற தாமதமாகும்.

தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

புதிய வாகனம், வீடு வாங்க நல்யோகம் உண்டு. அரசாங்க நன்மை கிடைக்கும். புத்திரர்கள் கருத்து பேதம் கொள்வர். வெகுநாள் பிரச்னை தீரும். மனைவியின் அன்பு, பாசம் நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் லாபம் கூடும். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்பர். மாணவர்கள் பெற்றோரிடம் நன்மதிப்பு பெறுவர்.

மகரம்

உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.

புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நிலையைக் காக்க ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவி வழி உறவினர்கள் உதவிகரமாக செயல்படுவர். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள், லட்சிய மனதுடன் பணிபுரிவர். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், வெளியிடங்களில் சுற்றுவதை குறைக்கவும்.

கும்பம்

அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.

குடும்பத்தில் சமரச பேச்சு நன்மையை தரும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவது நல்லது. தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவினால் சராசரி இலக்கை அடையும். பணியாளர்கள் பணியிடத்தில் பாதுகாப்பாக இருக்க வேண்டும். பெண்கள் வீட்டுச்செலவுக்கு சற்று திண்டாடலாம். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் கொள்வர்.

மீனம்

பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

மனைவியின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். பணியாளர்கள் புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் செலுத்துவர். பெண்கள் செலவுக்கு திண்டாட நேரிடும். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்கு பயணம் செல்ல வேண்டாம்.

சுதந்திர வேட்கை

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு புதிவு 108

● அடேல் பாலசிங்கம்



திருமணம் நடந்த போது நான் சென்னையில் இருந்தேன். எனவே ரஜனியை நான் அப்போது சந்திக்கவில்லை. நான் வல்வெட்டித் துறை வந்ததும், குமரப்பா செய்த முதல் வேலையில் ஒன்று, தமது இளம் மனைவியை எனக்கு அறிமுகம் செய்ததும் தான். தமது புதுமணப் பெண்ணை எமது வீட்டுக்கு அவர் அழைத்து வந்த போது பூரித்துப் போனேன். ஏனோ தெரியாது, ரஜனியைச் சந்தித்த அந்தக் கணம், இன்னமும் என் மனதில், தெளிவாக பசுமரத்தாணி போலப் பதிந்திருந்தது. அதற்குக் காரணம் என்ன? வெண் நிலாவொளி, குமரப்பாவின் முகத்தில் பட்டுத் தெறித்த போது, மகிழ்ச்சிப் பூரிப்புடன் இருந்த அந்த இளம் முகத்தில் பட்டுத் தெறித்த போது, ஒரு கணம் பளிச்சிட்டது. அழகா? அல்லது ஒருவர் மீது ஒருவர் கொண்ட காதலை வெளிப்படுத்தும் வெட்கமா? அன்று, வெள்ளி நிறைந்த இரவு, கதகதப்பாகவும் அமைதியாகவும் இருந்தது. குமரப்பாவும் ரஜனியும் ஒரு இரட்டைக்கதிரையில் அமர்ந்திருந்தார்கள். அவருடைய கரம் அவளுடைய தோளை அணைத்த படி இருந்தது. அந்த மாப்பிள்ளை தனது மணப்பெண்ணை உற்றுப் பார்த்த போது அவர் பூத்த முறுவல் இப்பொழுதும் என் நினைவில் நிற்கிறது. ஆனாலும் குமாரப்பா யாழ்ப்பாணத் தளபதி பொறுப்பை வகித்ததால் தமது இளம் மனைவியுடன் அதிக நேரம் செலவிட இயலவில்லை. பாலா, கிரமமாக குமரப்பாவுடன் யாழ்ப்பாணத்துக்குப் போய் வந்து கொண்டிருந்தார். குமரப்பா இல்லாத வேளை, நான் அடிக்கடி அவர்களுடைய குடும்ப வீட்டுக்குச் சென்று ரஜனியைச் சந்திப்பேன். எல்லாமே அமைதியாகவும், குதுகுலமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கொடுந்துயர் அவர்களைத் தாக்கும் என்றோ, குமரப்பாவின் உயிரைப் பறிக்கும் என்றோ, ரஜனியின் இதயத்தைச் சிதறடிக்கும் என்றோ எவர் தான் எதிர்பார்த்தார்?

மாலை ஐந்தரை போல, நான் ரஜனியைச் சந்திக்கச் சென்றேன். கடற்கரையில் உலவச் செல்வது என்பதுதான் திட்டம். குமரப்பா அப்போது வீட்டில் இருந்தார். ஆறு மணிக்கு தான் வெளியே போக இருப்பதாகக் கூறினார். தாம் புறப்படுவதற்கான ஆயத்தம் செய்யப் போவதால், நாம் உலவச் செல்ல வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். ஆனால் நாம் விரைவாக உலவிவிட்டுத் திரும்பினோம். புதிதாகத் திருமணமான அவர்களைத் தனியே விட்டு நான் கண்ணீயமாக அங்கிருந்து அகன்றேன். வழியில் திருகோணமலைத் தளபதி புலேந்திரன் ஒரு பெரிய மோட்டார் சைக்கிளில் வேகமாகச் செல்வதைக் கண்டேன். தாம் ஓட்டும் அந்த வண்டியின் பலமும், தம் முகத்தில் அறையும் காற்றும் அவருக்குத் தெம்பூட்டுவது தெரிந்தது. குமரப்பா செல்லும் அதே திக்கில் தான் புலேந்திரனும் செல்கிறார் என்பதும் சில நிமிடங்களில் அவர்கள் சந்திக்கப் போகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. ஒழுங்கை ஒன்றில் நான் எனது சைக்கிளை திருப்பும் போது, புலேந்திரன் என்னைக் கண்டார். முகமெல்லாம் பல்லாக, பளிச்சென்று சிரித்தபடி, கையை அசைத்த வண்ணம் வீதியால் கடந்து சென்றார். குமரப்பாவின் திருமணத்துக்கு சில வாரங்கள் முன்னதாகத் தான் புலேந்திரன் திருமணம் புரிந்திருந்தார். தமிழ்நாடு திருப்போரூர் முருகன் கோவிலில் சுபாவை, அவர் திருமணம் புரிந்தபோது, அந்த வைபவத்தில் நாமும் கலந்து கொண்டோம். இந்தக் கோவிலில் தான் சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரபாகரனுடைய திருமணமும் நடைபெற்றது.

(பதிவு தொடரும்)

வர்ணம் தீட்டுவோம்



கைவீசம்மா கைவீசு



கைவீசம்மா கைவீசு!
கடைக்குப் போகலாம் கைவீசு!
மிட்டாய் வாங்கலாம் கைவீசு!
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு!

அப்பம் வாங்கலாம் கைவீசு!
அமர்ந்து தின்னலாம் கைவீசு!
பூந்தி வாங்கலாம் கைவீசு!
பொருந்தி யுண்ணலாம் கைவீசு!
பழங்கள் வாங்கலாம் கைவீசு!
பரிந்து புசிக்கலாம் கைவீசு!

சொக்காய் வாங்கலாம் கைவீசு!
சொகுசாய்ப் போடலாம் கைவீசு!
கோயிலுக்குப் போகலாம் கைவீசு!
கும்பிட்டு வரலாம் கைவீசு!
தேரைப் பார்க்கலாம் கைவீசு!
திரும்பி வரலாம் கைவீசு!
கம்மல் வாங்கலாம் கைவீசு!
காதில் மாட்டல்லாம் கைவீசு!

இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



சிறுவர் உலகம்

யார் காரணம்?

கோடைகாலத்தில் ஒருநாள், அந்தச் சிறு ஊரின் தலைவர் ஒரு சிறுவன் மிகப்பெரிய, மிகவும் அழகான காற்றாடி ஒன்றை பறக்கவிடுவதைக் கண்டார். அவர் பார்த்ததிலேயே மிகவும் அழகான காற்றாடி அது. மிகவும் உயரத்தில், சீராக பறந்தது. அது பக்கத்து நகரத்தில் இருப்பவர்களுக்கு கூட தெரிந்திருக்கும் வகையில் மிக உயரமாகப் பறந்தது.

பெரும் சிறப்புகள் இல்லாத அந்தச் சிறு ஊரில் பறந்த அந்த அழகான காற்றாடி இப்படி உயரமாகவும், சீராகவும் பறப்பதற்குக் காரணமானவர் யாரென்று அறிய விரும்பினார் அந்த ஊரின் தலைவர்.

எனவே அவர். இந்தக் காற்றாடி இவ்வளவு உயரமாகப் பறந்ததற்கு யார் காரணம்? என காற்றாடியைப் பறக்க விட்ட சிறுவனிடம் கேட்டார்.

நான்தான், நான் என் கைகளாலேயே காற்றாடியை உருவாக்கினேன். நானே அதில் அழகான படங்களை வரைந்து அழகான காகிதத் துண்டுகளால் அதை உருவாக்கினேன். நானே அதைப் பறக்க வைத்தேன் என்றான் அதைப் பறக்க விட்ட சிறுவன்.

சிறுவன் பொய் சொல்கிறான். நான் தான் காற்றாடி பறந்ததற்கு முழுக் காரணம். என்னுடைய ஓட்டமே காற்றாடியைச் சீராகவும் சரியான திசையிலும் பறக்கச் செய்தது. நான் மட்டும் அதை நகர்த்தா விட்டால் அது பறந்திருக்கவே முடியாது. எனவே நானே அதை பறக்க வைத்தேன் என்றது காற்று.

இல்லை, நான் தான் காற்றாடி பறந்ததற்கு முதன்மைக் காரணம். நான்தான் காற்றாடியை நகர்த்தவும் காற்றில் அது நிலையாகப் பறக்கவும் காரணம். நானில்லாவிட்டால் காற்றாடி கட்டுப்பாடில்லாமல் சுற்றித் தரையில் விழுந்திருக்கும். அதை அந்தப் பையனால் கூட காப்பாற்றியிருக்க முடியாது. எனவே நானே அதைப் பறக்க வைத்தேன் என்றது என்றது காற்றாடியின் வால்.

இப்போது. உண்மையில் காற்றாடியைப் பறக்க வைத்தது யார்?

பல சமயங்களில் மக்கள் தங்கள் இலக்குகளை அடைவதில் மற்றவர் களின் பங்கு இருப்பதை மறந்து விடுகின்றனர். எல்லாம் தங்களால் மட்டுமே நடந்ததாக நினைக்கின்றனர். மற்றவர்கள் இல்லாமல் அந்த வேலை முடிந்திருக்காது. ஒவ்வொருவருமே அந்த வேலைக்கு முக்கியம் என உணருவதில்லை. உண்மையில் தனியாகச் செய்யப்படும் வேலை யை விடக் குழுவாகச் செய்யப்படும் வேலையே சிறப்பானது. ஏனெனில் கூட்டு முயற்சியின் பலன் அளவிட முடியாதது. குழுவிலிருப்பவர்களுடன் வேலை செய்யும் போது நமக்குச் சகிப்புத் தன்மை, பல விதமான சூழ்நிலைகளைக் கையாள்வது போன்ற சிறப்பு பண்புகள் வந்து சேரும்.

இங்கு யாரும் தனியானவர்கள் இல்லை. எனவே நம்முடைய பல செயல்பாடுகள் நம்மை மட்டுமின்றி மற்றவர்களையும் சார்ந்திருக்கிறது என்பதை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும்.

- கணேஷ்

சிறுகதை

உயிரா? உறவா?

கயல்விழி

“விடிஞ்சிட்டு எழும்பு தம்பி. கடைக்குக் கிடைக்குப் போய் காய் கறிகளை வாங்கி வந்தால் காய்ச்சிப் படைச்சுப் போடலாம் எல்லோ. இப்ப போனால் தான் நல்ல மரக்கறியள் வாங்கலாம். எழும்பப்பன்” அம்மாவின் குரல் என்னைச் சங்கடப்படுத்துகிறது. அதுகளுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்த வக்கில்லாமல் ஓடிய நாங்கள் படைச்சென்ன . காய்ச்சியென்ன?? அலுத்தது மனசு.

கண்கள் மூட மறுத்த இந்த வாரத்தின் முடிவு நாள் இந்த மாதத்தின் தொடக்க நாள். கண்ணீர் இன்றி என் மனசழும் காலமிது. எத்தனையோ வீடுகளில் இது தான் நிலை. அத்தனை சுமையை எங்கள் மீது கொடிய கடவுள் இறக்கி வைத்த நாள்கள் இவை. எப்படி நான் மறப்பேன். வருடங்கள் சும்மா இல்லை. காலில சக்கரத்தைக் கட்டிக்கொண்டு ஓடுது. நானும் தான் சேர்ந்து ஓடுறன். பலன் என்ன? என்ர மனச்சாட்சியைக் கொண்டு. நான் மிருகமாக நடந்த அந்த நாளை அந்தக் கணங்களை பத்து வருடமாகியும் என்னால் மறக்கவே முடியவில்லை.

இன்று என் நண்பன்ரையும். அவன்ர குடும்பத்தின்ரையும் நினைவு நாள். ஒன்றாக நாலு உருப்படிகளை நான் அநாதைப்பிணங்களாக விட்டு விட்டு கோழையாக ஓடிய நாள். வலிகாமத்துக்கு ஆமியின் படை நகர்வு ஆரம்பித்த வேளை அது. செல்லடிகள் பலரது காதுகளை ஊன மாக்கிச் சென்றது.நான் கூட அந்தத் தாக்கத்தை கனநாள் உணர்ந்திருக்கி றன். நாங்கள் மண்ணில் அ. ஆ எழுதிப்பழகிய காலம் தொட்டு . கள்ள மாங்காய்க்கு கல்லெறிந்து, மாடு மேய்ச்சு, மாட்டுக் குப் புல்லறுத்து, தோட்டம் செய்து , மத வடியில் சைக்கிலும், கையுமாக கூட்டம் கூடி காட்ஸ் விளையாடி, அரும்பும் மீசையுடன் அவரவர் வாழ்க்கைத் துணைகளை தேடி இப்படிப்பல நிகழ்வுகளுக்கு என்னோடு ஒன்றாக நின்றவன். அந்த இடப்பெயர்வோடு என் தோழமையை முடித்துக் கொண்டான்.

என்ர நண்பன் பாஸ்கரன் ஒரு வேலி. இங்கிருந்து நான் சமிக்ஞை காட்ட அதுக்கு ஏற்றபடி எங்களது அன் றாட நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வான். ஒன்றாக உண்டு ஒன் றாக உறங்கி வாழ்வோம். நாங்கள் மட்டும் இல்லை. எங்களுக்கு அமைஞ்ச மனைவிமார் கூட இருவரும் நல்ல நண்பிகள் தான். குடும்பம் குடும்பமாக எங்களது நட்பு விரிந்து சென்றது. செல்லடியின் உக் கிரம் உணர்ந்த பாஸ்கர் தோட்டம், துரவு, காணி, வீடு என்று இதுகளைக் கட்டிக் கொண்டிருந்த என்னையும் என் குடும்பத்தையும் எத்தனை தரம் கெஞ்சி இடம்பெயரச் செய்தான். “ எட பைத்தியக்காரா! காணி , பூமிகளை நாளைக்கு நாங்கள் வாங்கிச் சேர்க்க லாமடா. இதுகள் எங்க ஓடப் போகுது கள். நீ எத்தனை வருடம் கழிச்சு வந்தாலும் இங்க தான் இருக்கும். இதுகளைப் பார்க்கிறதுக்கு நீ முதலில உயிரோட இருக்கோணுமடா. விசர்க்கதை கதைக்காமல் வெளிக்கிடு போவம்” அவனது அதட்டலும் அன்பான வேண்டுதலும் உயிர் காக்க எங்களது ஓட்டத்தை ஆரம்பிக்க வைத்தது. இருவரும் ஆளுக்கொரு உழவு இயந்திரத்தில் அத்தியாவசிய மான பொருள்களை ஏற்றிக் கொண்டு வெளிக் கிட்டோம். அவனது வண்டி முன் னால் சென்று கொண்டிருந்தது. நான் அவ னைப் பின் தொடர்ந்தேன். இடையில் இரு மரநிழலில் அவன் வண்டியை மறித்து “மச்சான் சீப்பிளேன் மேலால பறக்குது. இப்படி இரண்டு வண்டி முன்னாலும் பின்னாலும் போக வந்து அடிக்கப் போறான். நான் முன்னால போறன். ஒரு கால் மணித்தியாலயம் கழிச்சு பின்னால வா. அவசரப்படாதே. நான் கொஞ்சத்தூரம் போய் காத்திருக்கிறேன்” என்றான்.

அவன் எப்பொழுதும் தீர்க்க தரிசனத்தோடு நடப்பதுண்டு. நானும் உடன்பட்டேன். அது தான் எங்கள் கடைசிப் பேச்சு என்று நான் எதிர் பார்க்கவில்லை. அவன் சொன்னபடி கால் மணிநேரம் கடந்த பின்னர் எனது குழந்தைகள் பசியாறி முடிய மரநிழலில் இருந்து வண்டியை எடுத்துக் கொண்டு நெடுஞ்சாலையில் பயணமானேன். கண்ணுக்கெட்டிய தூரம் வரை அவனைக் காண வில்லை. கொஞ்சம் விரைந்து சென்றேன். அவ னது வண்டி ஒரு மதவுடன் மோதி நின்றிருந்தது. அந்தப் பெட்டியில் இருந்து பொருள் களுக்கும் அவர்களது தசைகளுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. எல்லாம் ஒன்றாகிக் கிடந்தது. நாங்கள் நிழலில் நின்ற வேளை காதைக் கிழித்துக் கொண்டு சென்ற ‘செல்’ என் நண்பனை பதம் பார்த்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஒருவர் கூட மிச்சம் இல்லை. அவனது நாய் மட்டும் மதவி ன் கீழ் முனகிக் கேட்டது. அந்த சத்தத் தைக் கேட்ட எனது நாயோ தன் தோழனைத் தேடிக் குரைத்து குதித்துச் சென்றது. நாயை நின்று அழைத்து வர அவசரம் என்னை விடவில்லை. குடும்பத்தோடு அநாதையாக சிதறிப்போயிருக்கும் என் நண்பனை அருகில் சென்று கட்டி அணைத்து அழ என்னால் முடியவில்லை. “ அப்பர் பாஸ்கரன் மாமாவையின் வண்டி அங்க கிடக்குது, நாங்கள் எங்க போகிறோம்?” என் மகனின் கேள்விக்கு எனக்கு விடை கிடைக்கவில்லை. தேம்பி அழுது கொண்டிருந்த அவர் களை ‘சத்தம் போடாமல் இருக்கிறியளா? இப்ப இதில நிண்டால் உங்களுக்கும் இது தான் கதி” சற்று முரட்டுத் தனமாக அடக்கிவிட்டு நான் வண்டியை ஓடிய படியே இருந்தேன்”

ஒரு கணம் நின்று நான் அவனுக் காக அழுதால் அடுத்த கணம் தொடர்ந்து பெய்து கொண்டிருந்த செல்மழையில் நானும் அதே நிலைக்குத் தான் ஆளாகி யிருக்கக் கூடும். மரணத்தை தொட்டு விட்ட என் நண்பனைப்பற்றி விளிம்பில் நிற்கும் நான் சிந்திக்கலாமா? என்ற சமாதானத்தை எனக்கு நானே கூறிய போதும் அடிக்கடி நான் தலை குனி வேன். கோழையாக நான் எப்படி ஓடினேன். சீவனை விட்டுக் கிடப்பவன் என் நண் பன். அவனது உருவம் கூட சரியாக இல்லை. சிதறிப்போய் இருந்தான். கையும், காலும் எங்கெங்கோ போயிருக்க முண்டங் களாக கிடந்த அவனது உயிர் பார்க்கக் கிடைத்தால் என்னை மன்னிக்குமா? ஒன்றா இரண்டா 35 ஆண்டுகள் நட்பை அரைநொடியில் வந்த மரண பயம் அறுத்து விட்ட அவமானக் கதை யை மறந்து விடத்தான் முடியுமா? என் னையே என்னால் மன்னிக்க முடிய வில்லை. அவனிடம் மன்றாடு வதுண்டு. மன்னித்து விடும்படி. இறைஞ்சுவதுண்டு. மன்னிப்பானா? கேட்டுச் சொல்லுங்கள்! இன்று அவன் நினைவு நாள். காய்ச்சிப்படைப்போம். அவன் வந்து போவான் என்னை காறித்துப்பாமல் போவானா??

வடக்கின் ஞான...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது.

இது சகோதர இனங்களான தமிழர்களையும், முஸ்லிம்களையும் மோதவிடும் ஒரு கீழ்த்தரமான முயற்சியாகும். முஸ்லிம்களின் நலன்களைப் பேணுவது என்ற அடிப்படையில் இன்னொரு இனத்தின் நலன்களில் கைவைப்பது அப்பட்டமான ஒரு அரசியல் அநாகரிகமாகும்.

தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் முரண்பாடுகளையும், மோதல்களையும் ஏற்படுத்தி, அதில் தன்னை ஒரு முஸ்லிம்களின் நாயகனாகக் காட்ட முயல்வது அமைச்சர் ரிசாட் பதியூதீனுக்கு இது தான் முதல் தடவையல்ல.

மன்னார் பிரதேசத்தில் தமிழ் மக்களின் காணிகளில் முஸ்லிம்களைக் குடியேற்றுவதன் மூலம் இரு பகுதி மக்களுக்குமிடையே மோதல் ஏற்படும் வகையில் செயற்பட்டார். ஆனால் மன்னாரிலுள்ள தமிழ், முஸ்லிம் பிரமுகர்களின் முயற்சியால் பிரச்சினை சுமூகமாகத் தீர்க்கப்பட்டது.

இவ்வாறே மன்னார் உப்புக் குளம் பகுதியில் உள்ள மீன் பிடித்துறையை இடம்பெயர்ந்த தமிழ் மீனவர்கள் தற்காலிகமாகப் பாவிப்பதை எதிர்த்துப் போராட்டம் நடத்த முஸ்லிம் மீனவர்களுக்குப் பின்னணியில் நின்று செயற்பட்டார்.

சாளப்பங்குளத்தில் தமிழர்கள் உடனடியாக வெளியேற வேண்டுமெனச் சுவரொட்டி ஒட்டப்பட்டது. அந்த ஊர் கிராமசேவகர் எடுத்த முயற்சியால் ஒரு பெரும் மோதல் தவிர்க்கப்பட்டது.

வவுனியாவில் இந்திய வீட்டுத்திட்டத்தில் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய வீடுகளை புத்தளத்தைச் சேர்ந்த வசதி படைத்த முஸ்லிம்களுக்கு வழங்கினார்.

தென்னிலங்கையில் எவ்வாறு பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்த ஞானசாரதேரர் முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் சிங்கள மக்களைத் தூண்டி விட்டு வன்முறைகளை ஏற்படுத்தி வருகிறாரோ, அதேபாணியில் அமைச்சர் ரிசாட் பதியூதீன் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம் மக்களை அணி திரட்டும் வகையில் செயற்பட்டு வருகிறார். மஹிந்த அரசில் அமைச்சராக இருந்த போது செயற்பட்ட அதே விதமாக மைத்திரிபால அரசிலும் அவர் செயற்பட்டு வருகிறார்.

தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒரு பிரதேசத்தில் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் காலம் காலமாக வாழவேண்டிய சிறுபான்மை இனங்கள். எனவே தங்கள் சொந்த நலன்களுக்காக இரு இனங்களுக்குமிடையே முரண்பாடுகளையும், மோதல்களையும் ஏற்படுத்த முயலும் அரசியல்வாதிகள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டியது முக்கியமாகும்.

ரஷ்யாவிற்கு...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைகள் கொன்றன. இப்போது ரஷ்யர்கள் எம்மைக் கொல்கின்றார்கள். அடுத்து எம்மைக் கொல்ல யார் வருவார்கள். இப்படி ஆத்திரப்படுகின்றனர் சிரியர்கள்.

அல் கெய்தாவின் கிளை அமைப்பான ஜபத் அல் நஸ்ரா அமைப்பினர் ரஷ்யாவின் சிரியத் தலையீட்டை இஸ்லாமிய மார்க்கத்திற்கு எதிரான போராகப் பார்க்கின்றார்கள். ரஷ்யாவின் மரபுவழித் திருச்சபை ரஷ்யப் படைகளின் சிரியத் தலையீட்டை ஒரு புனிதப் போர் எனக்கருதுவதையும் அவர்கள் ஆத்திரத்துடன் கருத்தில் கொண்டுள்ளார்கள். மேலும் ஆப்கானிஸ்தானிலும் செஸ்னியாவிலும் ரஷ்யப் படைகள் இஸ்லாமியர்களுக்கு எதிராகக் கொடூரமான தாக்குதல் செய்தமையையும் அவர்கள் ஆத்திரத்துடன் நினைவு கூர்கின்றனர். ஐ எஸ் அமைப்பு மட்டுமல்ல அல் கெய்தா அமைப்பும் ரஷ்யாவிற்கு எதிராகத் திரும்புகின்றது, சிரியாவில் செயற்படும் ஜபத் அல் நஸ்ராவின் தலைவர் Abu Mohammed aldJolani ரஷ்யர்களைக் கொல்லும்படி, தன் போராளிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். சிரிய அல் நஸ்ரா அமைப்பில் உள்ள ரஷ்யரான Abu Ubaid aldMadan ரஷ்யர்களுக்கான தனது காணொளிச் செய்தியில் சிரியாவில் இருக்கும் உங்கள் மைந்தர்கள் உயிருடன் திரும்ப மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார். அல் நஸ்ராவைத் தொடர்ந்து. நைஜீரியாவில் செயற்படும் போக்கோ ஹரம், சோமாலியாவில் செயற்படும் அல் ஷபாப் ஆகிய அல் கெய்தாவின் இணை அமைப்புக்களும் ரஷ்யாவிற்கு எதிராகத் திரும்பலாம்.

மழைக்கால நோய்...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பவர்களைத் தவிர, அனைவரும் கண்டிப்பாகக் குளிக்க வேண்டும்.

ஆடையை நன்றாகத் துவைத்துப் பயன்படுத்துவது அவசியம்.

குறிப்பாக, உள்ளாடைகளை தினமும் மாற்ற வேண்டும். மழைக்காலத்தில் துணி துவைத்தால் காயாது என, சாக்குப்போக்கு சொல்லக் கூடாது. பகல் வேளையில் வெயிலில் துணிகளைத் துவைத்து உலர்த்தினால்தான் கிருமிகள் அழியும். உள்ளாடைகளைத் துவைக்காமல் அணியும்போது, தோல் நோய்கள் வரும்.

வருடத்துக்கு ஒருமுறை 'இன்ஃப்ளுவன்சா' (Influenza) தடுப்பூசி போட்டுக்கொள்வது, 'ஃப்ளூ' காய்ச்சலில் இருந்து காப்பாற்றும். குழந்தைகளுக்கு நிமோனியா காய்ச்சலைத் தடுப்பதற்கான 'நியூமோகோக்கல்' தடுப்பூசி போட வேண்டும். நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த முதியவர்கள் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் இந்தத் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளலாம்.

மழை மற்றும் குளிர்காலத்தில் செரிமானம் சற்று மந்தமாக இருக்கும். இதனால், காரம் மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுகளை எடுத்துக்கொள்வதைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

காய்கறி, பழங்களை அதிக அளவில் எடுத்துக்கொள்ளலாம். பழங்களை பகல் வேளையில் சாப்பிட வேண்டும்.

கொய்யா, மாதுளை, பப்பாளி, அப்பிள், அன்னாசி, பேரிக்காய், நெல்லிக்காய், தோடம்பழம் முதலானவற்றில் விற்றமின் சி நிறைவாக உள்ளன. இவை, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

வீதி ஓரங்களில் விற்கப்படும் 'ஃப்ரூட் சாலட்', நறுக்கப்பட்ட பழங்கள் போன்றவற்றில் கிருமித்தொற்று இருக்கக்கூடும். எனவே அவற்றைச் சாப்பிடக் கூடாது.

காலை, மதியம், இரவு என மூன்று வேளைகளிலும் புதிதாகச் சமைத்து சாப்பிட வேண்டும். எல்லோராலும் மதியம் சுடச்சுட வீட்டு சாப்பாட்டைச் சாப்பிட முடியாது. ஆனால், காலையில் சமைத்த உணவை ஐந்தாறு மணி நேரங்களுக்கிடையில் சாப்பிட்டுவிட வேண்டும்.

நார்ச்சத்து, புரதச்சத்து, மாச்சத்து, விற்றமின்கள், தாதுஉப்பு, கொழுப்புச் சத்து என அனைத்தும் நிறைந்த சரிவிகித உணவைச் சாப்பிட வேண்டும்.

மூலிகை சூப், ரசம், 'கிரீன் டீ' முதலியவற்றை அருந்தலாம்.

மழைக்காலத்தில் அதிகமாக கோப்பி, தேநீர் குடிக்கத் தோன்றும். ஆனால், அளவுக்கு அதிகமாக அருந்தக் கூடாது. ஒரு நாளைக்கு இரண்டு மூன்று குவளை மட்டுமே கோப்பி, தேநீர் அருந்த வேண்டும்.

சூடாக சத்துமாக் கஞ்சியை வீட்டில் தயாரித்துச் சாப்பிடலாம்.

மழைக்காலத்தில் தண்ணீர்த் தாகம் அதிகம் இருக்காது. அதனால், தண்ணீர் அருந்தாமலேயே இருக்கக் கூடாது. 'சூப்', ரசம், பால், தேநீர், கோப்பி எனத் திரவ உணவுகள் மற்றும் இரண்டு லீற்றர் தண்ணீர் அருந்துவது அவசியம்.

சிறுநீரை அடக்கக் கூடாது. சிறுநீர் கழிக்கும் உணர்வு வந்தால் சிறுநீர் கழிப்பது அவசியம்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் வீட்டில் கொதிக்கவைத்து, ஆறவைத்த தண்ணீரை எடுத்துச் சென்று குடிக்க வேண்டும்.

சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். வீட்டிலும் வீட்டைச் சுற்றியும் தண்ணீர் தேங்கவிடக் கூடாது. வீட்டைச்சுற்றி அவ்வப்போது குளோரின் பௌடர் தூவிச் சுத்தமாக வைத்திருக்கலாம்.

குப்பைகளை அவற்றுக்கு உரிய தொட்டிகளில் கொட்ட வேண்டும். பிளாஸ்டிக் பைகள், தேங்காய் ஓடுகள், டயர்கள் போன்றவற்றை வீட்டிலும் வீட்டுக்கு அருகிலும் இருந்து அகற்ற வேண்டும்.

வெளியில் இருந்து வீட்டுக்கு வரும்போது வாசலிலேயே கை, கால், முகம் போன்றவற்றை கழுவிவிட வேண்டும்.

செருப்பு, சப்பாத்து போன்றவற்றை சுத்தம் செய்ய வேண்டும். வீட்டுக்குள் வந்ததும் முதலில் உடைகளை மாற்றுவது அவசியம்.

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், கைவைத்தியமோ, மருந்தகங்களில் மாத்திரை வாங்கி விழுங்கவோ கூடாது. உடனடியாக அருகில் உள்ள பொது மருத்துவரை அணுக வேண்டும்.

மருத்துவமனைக்குச் சென்று இரத்தத்தைப் பரிசோதனை செய்து, என்ன வகையான காய்ச்சல் என்பதை அறிந்து, அதற்கேற்ப சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

எப்போதும் கையில் ஒரு கைக்குட்டை வைத்திருப்பது அவசியம். தும்மல் வந்தாலோ, சளி வந்தாலோ கைக்குட்டையைப் பயன்படுத்த வேண்டும்.

பொது இடங்களில் சளியை காறித் துப்பக் கூடாது. கைக்குட்டையை தினமும் நன்றாக வெந்நீரில் கழுவ வேண்டும்.

அடிக்கடி ஆவி பிடிக்க வேண்டும். ஆவி பிடிப்பது நுரையீரலுக்கு நல்லது. மிதமான சூட்டில் உள்ள வெந்நீரில் கல் உப்பு போட்டு, தொண்டையில் படுமாறு வாய்கொப்பளிப்பது தொண்டைப் புண்களை வராமல் தடுக்கும்.

மழைக்காலம் முழுவதும் ஒரே போர்வையைப் பயன்படுத்தக் கூடாது. 15 நாட்களுக்கு ஒருமுறை போர்வையைத் துவைத்து, உலர்த்திப் பயன்படுத்த வேண்டும்.

செயற்கை இரசாயனங்கள் கலந்த கொசுவர்த்தி, கொசுவத்தி திரவம் போன்றவற்றைத் தவிர்த்து, முடிந்தவரை மாலை நான்கு மணிக்கெல்லாம் ஜன்னல்களைப் பூட்டி, கொசுக்களை வீட்டுக்குள் வரவிடாமல் தடுப்பதே சிறந்த வழி.

HDFC வங்கி இப்ப
லீசிங்கும் குடுக்கினம்
என்ன!
எடுக்கவும் சூபர்,
கொடுக்கவும் லேசு
பாருங்கோ!!
HDFCLEASiNG
இப்போதே அழையுங்கள்
0115 73 73 73
எம்முடன் தொடர்பு கொண்டு பாசம் நிறைந்த எதிர்காலத்திற்காக அடித்தளமிடுங்கள்
உடன் தொடர்புக்கு: 011 5 73 73 73 / 011 2 35 68 00 பெக்ஸ்: 011 2 44 63 92 மின்னஞ்சல்: hdfc@hdfc.lk
இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
HDFC வங்கி
HDFC BANK

7 எண்ணெய் வகைகளின்
குணநலன்கள் ஒன்றாக
emami
7 OILS IN ONE
Damage Control Hair Oil
96% வரை தலைமுடி உதிர்வினை குறைக்கின்றது*
20% வரை தலைமுடியை வலுப்படுத்துகின்றது**
இப்போது ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.
"பாருங்கள்...! நான் எப்போதும் நம்பும்
Emami 7 oils in one அதிசயத்தக்க பலன்களை பெற்றுத்தருகின்றது"
Yami Gautam
உங்கள் தலைமுடி;
உதிர்வினை கட்டுப்படுத்துகின்றது.
வெடிப்பினை கட்டுப்படுத்துகின்றது.
பிரகாசமாக்குகின்றது.
இலகுவாக கையாள வழியமைக்கின்றது.
உறுதியாக்குகின்றது.
நீளமாகவும் அடர்த்தியாகவும் வளர்வதற்கு
உதவுகின்றது.
உயிரோட்டத்துடன் ஜொலிக்க உதவுகின்றது.
STRONG - LONG - BEAUTIFUL HAIR
50 மி. லீ: ரூ. 105.00
100 மி. லீ: ரூ. 200.00
தொலைபேசி: 0112326281 / 4
Jojoba Oil
Walnut Oil
Coconut Oil
Argan Oil
Amla Oil
Almond Oil
Olive Oil
PRO VM COMPLEX
The Ultimate Hair Perfector
with oils of almond, Argan, Jojoba, Amla, Walnut, Olive, Coconut
Non Sticky
*Based on instrumental studies on damaged Indian black hair with usage of 7 Oils in One Damaged Control Hair Oil™ as compared to un-treated damaged Indian Black Hair, at Reputed International & National institutes. Aug. - Nov. 2014 **Hair Fall due to hair breakage. ***Stronger Hair due to lesser Hair breakage. #Based on performance of the product in consumer study done on 288 consumer in India, August 2013 by IMRB. Hair Damage refers to Dry, Dull, Rough and Unmanageable Hair.

நலச்செழுமை மிக்க உள்நாட்டுப் பால்

தற்போது உங்களது விசுவாசத்தை வென்றுள்ள அங்கரிடமிருந்து கிடைக்கப்பெறுகின்றது

அறிமுகமாகின்றது

இலங்கையில் நாம் எமது பயணத்தை 38 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்திருந்தோம். இதன் போது, இலங்கையர்களுக்கு உயர் தரம் வாய்ந்த பாற்போஷாக்கை பெற்றுக் கொடுப்பது எமது நோக்கமாக அமைந்திருந்தது. கடந்த காலங்களில் உங்கள் மாறுபடும் தேவைகள் காரணமாக, உங்களுக்கு உயர் தரம் வாய்ந்த பாலுற்பத்திகளை இலகுவில் பெற்றுக் கொடுக்கும் வகையில் எம்மை ஊக்குவித்திருந்தது. இந்த புத்தாக்கம் தொடர்பில் தொடர்ச்சியான செயன்முறையின் மூலமாக, தற்போது நீங்கள் அங்கர் திரவப் பாலை அனுபவிக்கலாம். சர்வதேச தரங்களுக்கமைய இலங்கையின் தூய பாலை கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

1996 இல், 200 பாற்பண்ணைகளுடன் ஆரம்பித்திருந்த எமது செயற்பாடுகள், இன்று, பரந்து ஆயிரக்கணக்கான பாற்பண்ணைக் குடும்பங்களுடன் உறவை மேம்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது. இந்த குடும்பங்கள் உயர் தரம் வாய்ந்த பாற் போஷாக்கை வழங்க தம்மை அர்ப்பணித்துள்ளன.

அங்கர் திரவப் பால் அறிமுகத்துடன், 10 மில்லியன் லீற்றர்க்கும் அதிகமான பால் உள்நாட்டு பாற்பண்ணையாளர்களிடமிருந்து வருடாந்தம் சேகரிக்கப்படவுள்ளது. இதற்காக மிகப்பெரிய பாற்பண்ணையாளர்கள் வலையமைப்பு, பால் சேகரிப்பு மற்றும் குளிர வைக்கும் நிலையங்கள் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு திரட்டப்படும் பால், நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலைக்கு கொண்டு வரப்பட்டு, சர்வதேச தரங்களுக்கமைய பதப்படுத்தப்படுகிறது.

எமது அங்கர் திரவப் பால் அல்ட்ரா-உயர் வெப்பநிலை (UHT) பதப்படுத்தல் முறைக்கு உட்படுத்தப்பட்டு, பின்னர் 1 லீற்றர் 'Tetra pack' களில் அடைக்கப்படுகின்றன. இந்த UHT முறை மூலமாக குளிர்சாதனப் பெட்டியில் வைக்காமல் பாலை நீண்ட காலம் பழுதடையாமல் பேணக்கூடிய தன்மையை பெற்றுக் கொடுக்கலாம். மேலும், எவ்வித செயற்கை சேர்மானங்களும் சேர்க்கப்படாததன் காரணமாக, நீங்கள் தூய இலங்கை பாலை பெறுவதை உறுதி செய்து கொள்ள முடியும்.

பின்னர் அங்கர் திரவப் பால், நாடு முழுவதும் காணப்படும் விற்பனையகங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இதன் மூலம் சௌகர்யமான பொதியில், சிறந்த போஷாக்கை உங்களால் அனுபவிக்க முடியும்.

உள்நாட்டு பாற்பண்ணைத்துறையை வலிமையடையச் செய்வதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம், அதாவது, பால் குளிரவைத்தல் மற்றும் சேகரிப்பு நிலையங்கள் நிறுவுதல் போன்றவற்றில் நாம் முதலீடுகளை மேற்கொள்கிறோம். இந்த நிலையங்கள் உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுடன் அறிவு பகிர்வு மையங்களாக இயங்கும். இலங்கையின் பாற்பண்ணைத்துறையின் வளர்ச்சிக்கு இந்த செயற்பாடுகள் பங்களிப்பு வழங்கும் வகையில் அமைந்திருக்கும்.

நீங்கள் அங்கர் திரவப் பாலை கொள்வனவு செய்யும் ஒவ்வொரு தடவையும், உள்நாட்டு பாற்பண்ணைத்துறைக்கு பங்களிப்பு வழங்குகின்றீர்கள். அதாவது, தரம் மற்றும் உற்பத்தியை மேம்படுத்த தம்மை அர்ப்பணித்துள்ள உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுக்கு வருமானமீட்டுவதற்கு நீங்கள் உங்கள் பங்களிப்பை வழங்குகின்றீர்கள்.

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 ஒக்ரோபர் 21ஆம் திகதி வெளியிடப்பட்டது.